திரிபுவந சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித் தலையும் கொண்ட [மூன்றும்] குலோத்துங்க சோழ தேவனுடைய 31-ஆம் ஆண்டுக் கல்வெட்டு. ஜயங்கொண்ட சொழ மண்டலத் துப் புலியூர்க் கொட்டமான குலொத்துங்க சொழ வளநாட்டு நக ரம் பூந்தமல்லி வெட்டந்தை நம்பியாண்டி மகன் வெமயாழ்வான் அதே மண்டலத்துச் செதிகுல மாணிக்க வளநாட்டுப் பெடை நாட்டு நெல்லூரான விக்கிரம சிங்க புரத்துத் திருப்பாற் கடல் சித்திர மெழி விண்ணகரான பள்ளி கொண்ட பெருமாள் கொயில் உள் திருச் சுற்றில் அவன் தகப்பன் எழுந்தருளுவித்த ஸ்ரீ வராகப் பெருமானுக்குத் திருவிடையாட்டமாகத் திருப்பாற் கடல் அகரத்தில் இரண்டு பாகம் கொண்டு விட்ட செய்தியைத் தெரிவிப்பது.

நெல்லூர் ஜில்லா சாசனங்கள், II பாகம், 840-41 பக்கங்களில் நெல் லூர் 70 நெ. ஆக வெளியாகியுள்ளது.

தென்னிந்திய சாசனங்கள், V வால்யூம், 491 நெ. ஆகவும் பதிப்பிக் கப்பெற்றுள்ளது.

சாசனம் — 941] [D. 3362-4

[அதே சுவரில் உள்ளது.]

திரிபுவன சக்கரவர்த்திகள் பாண்டியன் முடித்தலையும் மது ரையும் கொண்டருளின [மூன்றும்] குலோத்துங்க சோழ தேவனு டைய 10-ஆம் ஆண்டுக் கல்வெட்டு. ஜெயங்கொண்ட சொழ மண்டலத்துச் செதி குல மாணிக்க வளநாட்டுப் பெடை நாட்டு நெல்லூரான விக்கிரம சிங்க புரத்துப் படை முதலிகளும் மூன்று தெருவில் நகரத்தாரும் திருப்பாற் கடல் பள்ளி கொண்ட பெரு மாளுக்கு ஆயம் வைத்துக் கொடுத்த செய்தியைத் தெரிவிப்பது. சிதிலமாக இருக்கிறது.

நெல்லூர் ஜில்லா சாசனங்கள், II பாகம், 838-39 பக்கங்களில் நெல்லூர் 69 நெ. ஆக வெளியாகியுள்ளது. மக்கென்ஸியின் பிரதியில் அர சன் ஆண்டை டுடு என்றும் வாசிக்க முடியும்.

தென்னிந்திய சாசனங்கள், V வால்யூம், 492 நெ. பார்க்க.

சாசனம்—942] [D. 3362-5

[அதே கோவில் மேல்புறச் சுவரில் காண்பது.]

சகரையாண்டு [௲௨௱௨௰௪ பிலவ] ஸம்வத்ஸரம் கொண்ட திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ இராச கண்ட கோபால தேவனு

டைய 12-ஆம் ஆண்டு மகர ஞாயிறு பூர்வ பக்ஷம் தசமி திங்கட் கிழமை பெற்ற உரோசணி நாள் கல்வெட்டு. செயங்கொண்ட சொழ மண்டலத்துச் செதிகுல மாணிக்க வளநாட்டுப் படை நாட்டு நெல்லூரான விக்கிரம சிங்க புரத்துத் திருப்பாற் கடல் சித்திர மெழி விண்ணகரான பள்ளிகொண்ட பெருமாளுக்கு நித்த நிமந்தங்களுக்கும் திருப்பணிக்கும் உடலாகப் படைநாட்டுத் தாண்டிப்பூறு என்னும் கிராமத்தை மதுராந்தகப் பொத்தப்பிச் சொழன் ரங்கநாதன் ஆன இராச கண்ட கோபால தெவன் விட்ட செய்தியைத் தெரிவிப்பது.

நெல்லூர் ஜில்லா சாசனங்கள், II பாகம், 829-30 பக்கங்களில் நெல்லூர் 60 நெ. ஆக வெளியாகியுள்ளது.

சாசனம்—943] [D. 3362-6

[அதே கோவிலின் வடபுறம் சுவரில் காண்பது.]

அடுத்து வரும் சாசனத்தைப் போலவே இதுவும் அக்கோயிலுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள் எந்த எந்தக் கிராமங்களில் எவ்வளவு எவ்வளவு இருக்கின்றன என்பது பற்றிய விவரங்களைத் தெரிவிப்பதாகத் தோன்றுகிறது. மிகவும் பிழைபடப் பிரதி செய்யப்பட்டிருக்கிறது.

தென்னிந்திய சாசனங்கள், V வால்யூம், 503 நெ. ஆக வெளியாகியுள்ளது. நெல்லூர் ஜில்லா சாசனங்கள், II பாகம், 828-ஆம் பக்கத்தில் நெல்லூர் 53 நெ. ஆகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

சாசனம் — 944] [D. 3362-7

[அதே கோவிலின் வடபுறச் சுவரில் எழுதியிருப்பது.]

சிறுகட்டை நாட்டு மன்று பொழில் முதலிய இடங்களில் எவ்வளவு நிலம் கோயிலுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதென்னும் செய்தியைத் தெரிவிப்பது.

தென்னிந்திய சாசனங்கள், V வால்யூம், 502 நெ. ஆக வெளியிடப்பெற்றிருக்கிறது. நெல்லூர் ஜில்லா சாசனங்கள், II பாகம், 826-ஆம் பக்கத்தில் நெல்லூர் 56 நெ. ஆக வெளியிடப்பெற்றுள்ளது.

திருவாங்கூர்—கொச்சி ராஜ்யம்

TRAVANCORE—COCHIN STATE

இதற்கு முன் திருவாங்கூர் ஸம்ஸ்தானம் என்ற வழங்கிய பிரதேசத்தில் செங்கோட்டைத் தாலுகாவில், முக்கியமாகச் செங்கோட்டையிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும், கிடைத்த சாசனங்களே இவை. சாசனங்களில் வரும் ஸம்ஸ்கிருதப் பகுதியைக் கிரந்தம் மலேயாளம் ஆகிய இரண்டும் கலந்தும் எண்கள் போன்ற இதர குறியீடுகளைக் கல்லில் கண்ட விதமே உருவங்களைப் பெயர்த்தும் மூலப் பிரதியிலே எழுதியிருக்கிறது.

களாங்காடு — Kaḷāṅgāḍu

இவ்வூரின் பெயர் கிளங்காடு என்று மக்கென்ஸியின் பிரதியில் காணப்படுகிறது. இது, 'செங்கோட்டைக் கரை வாசலுக்குச் சேர்ந்த கிளங்காடு மணியத்தில் ஷை ஊர்' என்று அதிலே எழுதியிருப்பதிலிருந்து விளங்கும்.

ஊரிலே ஜமதக்கினேசுவரர் என்ற சிவன் கோவிலும் திருவேங்கடநாதர் அல்லது வேங்கடாசலபதி என்ற பெருமாள் கோவிலும் உள்ளன.

சாசனம் — 945] [D. 3740

திருவேங்கடநாதப் பெருமாள் கோவிலில் உள்ள செப்புப் பட்டையம்.

இந்தச் சாசனம் அதே கோவிலின் சுவரிலும் பொறிக்கப்பட்டுக் காண்கிறது. 'செப்பேடு மூன்றும் பிரதியே யாகும்' என்று கூறப்படுவது இதிலிருந்து நன்கு விளங்கும். சாசனங்களுக்காக ஓலையில் எழுதப்பட்டு வரும் உத்தரவே பிடிபாடு ஆக அமைந்த முதல் பிரதி. பின்னரே அது கல்லிலும் செம்பிலும் வெட்டப்பெற்று வந்தது. கல்லில் வெட்டியது இரண்டாம் பிரதி; செப்பேடு மூன்றும் பிரதி.

கல்லில் பொறிக்கப்பட்டிருக்கும் பிரதி திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 277-78 பக்கங்களில் 'U' அடையாளமிட்டு வெளியிடப்பட்டுள்ளது. அதிலே சகரப்தம் [௲௪௱௯௰௩]உ எனவும் வைகாசி ௴ ௰௫௳ எனவும் காணப்படுகிறது.

[அடுத்த சாசனத்தைப் பார்க்க.]

Copper-plate grant in the possession of the temple of Vishṇu known as Tiruvēṅkaḍanāthapperumāḷ or Vēṅkaṭachalapati in the village. Record dated in Śaka 1493, Prajōtpatti, Uttarāyaṇa,

Vasanta ritu, Vaikāśi 5, Śu. daśami, Friday, Uttara corresponding to the 8th year of the reign of the Later Pāṇḍya king Perumāḷ **Alagan Perumal Ativiraraman** *alias* **Sri Vallabhadeva**, son of Perumāḷ Tirunelvēlipperumāḷ Vīraveṇbāmālaiyān Dharmapperumāḷ Kulaśēkharadēva registering the tax-free *sarvamānya* gift of some land as tiruviḍaiyāṭṭam to god Tiruvēnkaḍanātha of Kiḷāṅgaṭṭūr.

There is a similar record on the south wall of the central shrine in the temple, [vide the next record] and this has been published as 'U' in pp. 277-78 of the **Travancore Archaeological Series**, Vol. I. Therein the Śaka year is given as [149]2 and the date as 15.

The date is given as 'Vaikāśi 7' in the copy of the same inscription on stone published below. Then the equivalent English date would be A. D. 1571, May 4.

ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] ஶகாப்தம் ௲௪௱௯௰௨-ன் மெல் செல்லா நின்ற ஸ்வஸ்தி ஸ்ரீ ஸர்வலோகைக வீர அத்ருகார்ய ப்ரபவ உபயராஜமௌக்த ஜயஸ்தம்ப மண்டபராஜ்ய யீஸ்வர க்ஷேத்ரபால நரஸிம்ஹ கொரமண்டலாதிபாகர சொழ ஸிம்ஹாஸந(ஸ்)தர் ஸாஹித்யஸாவபௌம தெவ ப்ராஹ்மணஸ்தாபநாசார்ய மெர ஜபிய வஜ்ரமான த்ரிபுவந சக்ரவர்த்தி கொனாமைக் கொண்டான்[1] ஸ்ரீ [பெருமாள்][2] திருநெல்வெலி [பெருமா]ள் வீரா வெண்ம்பாமாலையான் தற்ம பெருமாள் கொறுசெவரதெவர் னங்கர[ா*]ய ஸ்ரீ பெருமாள் அளகம் பெருமாள் அதிவீரராமநாய ஸ்ரீ வல்லப தெவருக்கு ஆண்டு எட்டாவது ப்ரஜோத்பத்தி நாம ஸம்வத்ஸரத்து உத்தராயணத்து வஸந்த ருதுவில் வையாசி மீ ௫ உ-யும்[3] வர்த்தமாந பக்ஷத்து தஶமியும் ஶுக்ரவாரம் ஸௌபாக்ய யொகமும் சுபகரணமும் பெத்த உத்திர நக்ஷத்திரத்து [நாள்*] ஸ்ரீ வர்த்தமாந நக்ஷத்ரத்து நாள் ஜாதராய ஸ்ரீ பெருமாள் அழகன் பெருமாள் அதிவீரராமநாய ஸ்ரீ வல்லபதெவ ந[ா*]ய நாம[4] கிளங்காட்டூரில் நயினார் திருவெங்கடநாதருக்கு

---

1. 'கொனெரின்மை கொண்டான்' என்று வாசிக்க.

2. இந்தச் சாசனத்திலும் இதை யடுத்து வரும் மற்றைச் சாசனங்களிலும் 'பெருமாள்' என்பது எட்டிலே 'ளுள்' என்பது போன்ற ஒரு குறியீட்டால் எழுதப்பட்டிருக்கிறது.

3. இதே சாசனத்துக்குக் கல்லில் உள்ள பிரதியில் தேதி 'எ' என்று காணப்படுகிறது. [அடுத்த சாசனம் பார்க்க.]

4. 'நாம்' என்று வாசிக்க,

திருவிடயாட்டம் ஸர்வமான்யமாக (வ)[விட்ட] ன[ம்*] வாசல்க் கணக்கர் யிட்(டு)[ட] கைத்தடிப்படி: வடவாரி நாட்டு பண் பொளி உள்ளிட்ட பத்தில் பண்டு[ண*]டயானையும் பழம்பெண ணாயும்[1] தவிர்த்து நம் கண்டு உழவு தொரந்து [2]திருவிடயாட்டம் விட்டதற்க்கு எல்கையாவது : ஞளிட்டு வென்றான் கடமாக்கொ ளம் உள்பட்டதற்க்கு எல்கை[3] எலத்தூர்க் காலுக்கும் மெல்ப்படி கொளத்து நீர் கல்லுக்கும் மெற்கு தென்னெல்கை பழஞ்சைக் கால்ப் புரவுக்கு வடக்கு மெல் எல்கை கீள்மலாத்துப் பொவு கெழக்கு வட எல்கை ஆத்துக்கு தெற்கும் கன்னம் தொட்புக்கு மெற்குமாக இன் னுங்கு எல்கைக்கி உள்ப்பட்டதற்கு உள்க் கெடையாய் உள்ள கண்டன் ஸாஹஸ்ர தேவதாயமு கொண்டு த்³வாவும்[4] பண்ம்பொளி மகா தெவர் தெவதாயம் தெர்க்கு [க*]டைமாக் கொளம் நீங்கலாம் பிரத்துண்டான நஞ்சை புஞ்சையளும் தொப் புள்ளதும் நத்தம் செய்தலைத் தொடரும்[5] வ்ருக்ஷ கூப நி[தி] ஜ[ல*]பாஷாணாக்ஷிண்யாகாமி ஸித்தஸாத்ய மென்னப்பட்ட அஷ்ட ஹோம தேஜஸ்வாம்யங்களுக்கும் நாங்கொள்ளும் கொமுவரயாய் யெர் த்தப்பட்டதுமாம் வரி உள்ள தாநாதி விநிமய விக்ரயங்களுக்கும் யொக்கியமாக செம்பிலும் சிலையிலும் வெட்டி யிவ்வாலய முள்ள படிம [ஸர்வ]மாந்யமாஹ கய்யாண்டு கொள்ளவும். இவை பார் கொமெழு[ர் உடை]டயான் எழுத்து.

தாநபாலநயோர்மத்யே
  தாநாச்ச்ரேயோநுபாலநம் |
தாநாத்ஸ்வர்கமவாப்நோதி
  பாலநாதச்யுதம் பதம் ||
    ஸ்ரீம்ருத்யுஞ்ஜயம்[|*] ஸாநந்த ஸ்வஸ்தி[||*]

சாசனம் — 946] [D. 3741

அதே கோவிலில் விமானத்தின் தென்பக்கத்தில் இருந்த சிலாசாசனம்.

ஏற்கெனவே நாம் குறிப்பிட்டபடி மேலே உள்ள செப்பேட்டுச் சாசனத் துக்குக் கல்லில் வெட்டிய பிரதி இது. அதனோடு இதை ஒப்பிட்டுப் பார்க்க.

---

1. ‘பழம் பெரையும்’ என்று வாசிக்க.
2. ‘திறந்து’ என வாசிக்க.
3. ‘எல்கை கீள் எல்கை எலத்தூர்’ என்று சேர்த்து வாசிக்க.
4. ‘இரண்டு மாவும்’ என்று இருத்தல் வேண்டும்.
5. ‘திடரும்’ என வாசிக்க.

42

As stated already, the present record is a copy on stone, engraved on the south wall of the central shrine of the temple, of the previous inscription, a copper-plate grant.

ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] ஶகாப்தம் தசாக௲ன்-ன் மெல் செல்லா
நின்ற ஸ்வஸ்தி ஸ்ரீ ஹாவநெகவீர அநந்தகாஞ்சு ப்ரஹவ உயாரா
உஹெந்த ஜயதெ உம்மடைவாரவ்வாராயீஶ்வர க்ஷேத்ரவாரா 'நாரஸிம்ஹ
கெரள தரெக்ஷிவாகர தொளை விஸ்வாவவைவ(ஷு)ாநழு ஶாஹிதஙு
ஸாவர்ஹளஉ தெ[வ*] ஸ்ரு[ா*]ஹண ஸ்வாவநாதாயநாதெமொ ஐபிஞு
வஜ்ரான திரிஹாவந அகரவதிர் கொநாமைக் கொண்டான் ஸ்ரீ
[பெருமா]ள் திருநெல்வெலி பெருமாள் வீர வெண்ம்பாமாலை
யான தர்ம்பெருமாள் கெ[ா*]ளுமெவரதெவர் னந்தர[ா*]ய ஸ்ரீ
பேருமாள் அள[க*]ம் பெருமாள் அதிவீரராமநாய ஸ்ரீ வல்லபதெவ
ருக்கு ஆண்டு எட்டாது ப்ரஜொத்பத்தி நாம ஸம்வத்ஸரத்து உத்த
ராயணத்தா வஸந்த ரிதாவில் வையாசி மீ எ௨-யும் பூர்வப
க்ஷத்தா தஶமியும் ஶாக்ரவாரமு ஶாஹயொம சுபகரணமும்
பெத்த உத்திர நக்ஷத்ரத்து [நாள்*] ஸ்ரீ வாநவஸா நக்ஷ
த்ரத்து னுள் ஜாதனாய ஸ்ரீ பெருமாள் அளகன் பெருமாள் அதி
வீரராமனாய ஸ்ரீ வல்லபதெவந[ா*]ய நாம் கிளாங்காட்டூரில் நயி
னார் திருவெங்கடனுதர்க்கு திருவிடயாட்டம் ஸவமாநயமாக
வட்ட. ௩ம் வாசல்க் கணக்கர்யிட்டு கைத்தடிப்படி: வடவாரினுட்டு
பண்பொளி உள்ளிட்ட பத்தில் பண்டு[ை*]ட யானையும் பழம்
பெ(ணண)ரையும் தவிர்த்து நம் கண்டு உழவு தெரந்து திருவிட
யாட்டம் விட்டதற்க்கு எல்கையாவது: நாளிட்டு வென்றுன்க்
கடமாக் கொளம் வுள்ப்பட்டதற்க்கு எல்கை எலத்தூர்க் காலுக்
கும் ஷெ கொளத்து நீர்க் கல்லுக்கும் மெற்கு தென்னெல்கை
பழுஞ்சைக் கால்ப் புறவுக்கு வடக்கு[1] மெல் எல்கை கிள் மலாத்து
பெரவு கிழக்கு வட எல்கை ஆத்துக்குத் தெர்க்கும் கன்னங்தொப்
புக்கு மெறக்கும் ஆக இன்னுங்கு எல்கைக்கு உள்பட்டதற்கு
உள்க் கெடையாய் உள்ள கண்டன் ஶாஸ்த்ர தெவதாயம் மாவும்
பண்ம்பொளி மஹாதெவர் தெவதாயமு தெர்க்குக் கடமாக்கொளம்
நீங்கலாம் பிரவத கண்டான் நஞ்சை புஞ்சையளும் தொப்புள்ள
தும் நத்தம் செய்தலைத் தெடரும் வரக்ஷ காவ நியி ஐது வாஷா
ண[ா*]க்ஷிணா[ா*]மாஸிஷவாஸம் என்னப்பட்ட அஷ்டஹொமதெஜ

1. திருவாங்கூர் வெளியீட்டில் இதுவரையில் தான் காணப்படுகிறது. மேலே உள்ள பகுதி சிதிலமாகி விட்டதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

ஸ்தாவரங்களுக்கு நாங் கொள்ளும் கொமுவறயாய் யெர்த்தப்பட் டதுமாழ வரி உள்ள தாநாதி விநிமய விக்ரயங்களுக்கு யோக்யமாக செம்பிலும் சிலேயிலும் வெட்டி யிவ்வாலய முள்ளபடி [ஸர்வ] மாந்யமாக கையாண்டு கொள்ளவும். இவை பார்கொமெழூர் உடையான் எழுத்து.

தாநபாலநயோர்மத்யே தாநாச்ச்ரேயோநுபாலநம்|
தாநாத்ஸ்வர்க்கமவாப்நோதி பாலநாதச்யுதம் பதம்[||*]
ஸ்ரீ: [|*] ஸாஹஸ்தா [||*]

சாசனம் — **947**] [D. 3742-சு

அதே ஊரில் ஜமதக்கிநேசுவரர் கோவிலுக்கு வெளியில் கிழக்குப் பக்கத்தில் குத்துக்கல் நட்டிருப்பதில் எழுதியிருந்த சிலாசாசனம்.

இது திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், VII வால்யூம், 33வெ. ஆக வெளியாகியுள்ளது. அதிலே சாசனம் பூர்த்தியாக இல்லே. மக்கென்ஸியின் பிரதியில் முழுமையும் காணப்படுகிறது.

On a stone set up in front of the Jamadagnis'vara temple. Record dated in S'aka 1665, Kollam 919, registering the gift by the Travancore king **Balamarttandavarman** and Śinnaṇañjādēvar, a polegar chief, of the gardens bestowed on the temple by several individuals, for conducting the early morning worship (*śirukālai sandi*) of the god and for the expenses of certein temple festivals.

This has been published as No. 33 in the **Travancore Archaeological Series, Vol. VII.** where the concluding portion of the text is not available. Therein the month and date, Tai 21, are also given in addition to the year.

சாலீவாகன சகாப்தம் ௲௬௱௬௫-ன் மெல் செல்லா னின்ற கொல்லம் ௯௱௰௯ ௵[1] சுவாமி சமதக்கினி யீசுவரர் திருவிள யாட்டம் சிறுகா[லை*]ல சந்திக் கட்டளேக்கு திருவிளாப் பிறத்துக்கு மாக விட்டது. சங்கு செருவைகாரன் உபயம்[2] லாந்தைத் திருத்து ௬௨ ௪?-ம் நந்தவனப் பிறம் ௬௨ கவ-ம் இராசா வய்யனவர்கள் விட்டுக் கொடுத்தது[ம்*] ஷெ தொப்பு அஞ்சு இலுப்பை மரந் தொப்பும் பனிந் தொப்பும் சங்கர நாருயண பிள்ளே சக்கரை

1. திருவாங்கூர்ச் சாசன இலாகா வெளியீட்டில் 'தை மாதம் ௨௰௧' என்பதும் கொடுக்கப்பட்டுள்ளது.

2. அதிலே 'உடைப்பும்' என்று காணப்படுகிறது.

யப் பிள்ளை [1] [நற்*]குத்தாலம் பிள்ளை கண்ணுயிர முதலியார் அம்பலவாண முதலியார் ஆறுமுகத் தெவரிவர்கள் தருதாயி [2] மிதிலுள்ளார்க்கு [நிதி*] நிக்ஷெப சல தரு பாஷாணங்களும் திருவிளாவாய் சுவாமிக்கென்று ஸ்ரீ வால மார்த்தாண்ட வற்மகுல ருஜா அவர்களும் [3] சின்னைஞ் ச[ர*]த்தெவர் அவர்களுமாக தலத்தார் குலசெகரப்பட்டர் கையில் தான[4]மும் செய்து ரிாசகரத்தில் எளப்பிச்சு செய்ய தற்ம பத்தாவாக்கி சங்கரலிங்க முதலியாரை கட்டளையிட்டபடியினாலெ யிந்த தருமத்துக்கு யாதாமொருத்தர் விக்கினஞ் செய்தாலும் முதலை அபெக்ஷித்தாலும் சிலவழித்தாலும் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தொஷத்தில் பொவாருகவும். உ

சாசனம் — **948**] [D. 3742-எ

அதே கோவிலுக்கு வடக்குப் பக்கத்தில் குத்துக்கல்லிலே இருந்த சிலா சாசனம்.

கொல்லம் 961, விசுவாவசுஸூ அற்பசிமீ ௧௧௨ சொமவாரம் புனர்பூசநாள் கொண்ட கல்வெட்டு. கிளாங்காடு சுவாமி சமதக் கினீசுவரருடைய உச்ச சந்திக் கட்டளைக்குப் பெரிய முதலியார் என்னும் தளவாய் தீத்தாரப்ப முதலியார் சரசுவதி குளத்தின் கீழ் நிலம் விட்ட செய்தியைத் தெரிவிப்பது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், VII வால்யூம், 34 செ. ஆக வெளியாகியிருக்கிறது.

சாசனம் — **949**] [D. 3742-அ

கோவில் உள் விமானத்தில் தென்பக்கத்திலிருந்த சிலாசாசனம்.

பாண்டியமன்னன் கொஜடிலவர்மரானதிருபுவன சக்கரவர்த்திகள் பெருமாள் குலசேகர தேவருடைய ஆட்சியின் பதினைந்தாம் ஆண்டும் சகாப்தம் 1416, மீன ஞாயிறு 10௨ பூர்வபக்ஷத்துத் தசமி

---

1 இதைத் ‘[தீத்தாரப்ப]பிள்ளை’ என்று வாசித்திருக்கிறார்கள்.

2 இந்தப் பகுதி ‘[அன்னவா]ண முதலியார் ஆறுமுக[த் தம்பிரான்] வரிக்கத் தொப்பு’ என்று வாசிக்கப்பட்டுள்ளது.

3 ‘திருவுளாவரியும் சாக்கென்று ஸ்ரீபால மார்த்தாண்டவற்ம தம்பிராரவர்களும்’ எனக் காணப்படுகிறது.

4 திருவாங்கூர்ச் சாசன வெளியீட்டில் இது வரையில்தான் உள்ளது.

சுக்கிரவாரம் பெற்ற பூசத்து நாள் கல்வெட்டு. வடவாரி நாட்டுக் கிளாங்காட்டூர் உடையார் திருவக்கினீசுவரமுடைய நாயனார் கோயில், பிள்ளையார் கோயில் ஆகிய இரண்டையும் காசியப கோத்திரத்துப் போதாயன சூத்திரத்து இளைய நயினான் தண்டை தந்த சுவாமி பட்டனுக்குக் காணியாட்சியாகக் கொடுத்து அதற்காக நிலமும் 550 பணமும் அளிக்கப்பெற்ற செய்தியைத் தெரிவிப்பது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 265-66 பக்கங்களில் 'J' குறியிட்டு வெளியாகியுள்ளது. அதிலே சுவாமியின் பெயர் திருவக்கீசுவரமுடைய நாயனார் என்று காணப்படுகிறது

சாசனம் — 950 [D. 3742-க

ஷை கோவிலுக்கு வடக்குப் பக்கத்திலிருந்த சிலாசாசனம்.

இது திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 267-68-ஆம் பக்கங்களில் L அடையாளமிட்ட சாசனமாக வெளியாகி யுள்ளது.

On the north wall of central shrine in the Jamadagnīśvara temple.

Record dated in Śaka 1470, Kīlaka, Māsi 27, S'u. êkādas'i, Friday, Uttara, corresponding to the 6th year of the reign of the Later Pāṇḍyan king Jaṭilavarman *alias* Tribhuvana chakravartin Perumāḷ **Parakrama Pandyadeva**, son of Abhirāma Parākrama Pāṇḍyadēva, registering a gift of land by Kulaśēkharavarman, son of Perumaḷ Tirunelvēli perumaḷ to meet the expenses of the daily and special worship of god Tiruvagniśvaram-uḍaiya-Nāyanār at Kiḷaṅgaṭṭūr in Vaḍavāri-nāḍu.

This inscription has been published as item 'L' in pp 267-68 of the **Travancore Archaeological Series**, Vol. I. There the text is incomplete. Further the *nakshatra* is given at Uttarāḍam and the name of the donor prince as Abhirāmavarman (instead of Kulas'ēkharavarman found in the Mackenzie text).

The corresponding English date would be A.D. 1549, February 22, with the *nakshatra* Uttarāshaḍa.

ஸ்வஸ்தி[॥*]சகாப்த தசாஎம்-ல் ஸ்வஸ்திஸ்ரீ[॥*]கொ ஜடிவ வஜ-ரான ஸ்ரீ[திரி*]புவன சக்கரவர்த்திக்கு கொனெர்மை கொண்டமண் வாமூனது விரபராக்கிரம பாண்டிய தொணரானறகு ஸ்ரீ

வீரதிச பாண்டிய தெவருக்கு[1] இயாண்டு ஆராவது கீலகவருஷ மாசிமீ உ[ம்*]எவ தசமியும் பூர்வ பக்ஷத்து ஏகாதசியும் சுக்கிர வாறமும் ஆயுஷ்யமான ஞம யொகமும் பவகரணமும் பெற்ற உத்திரத்து[2] நாள் ஸ்ரீ பெருமாள் திருநெல்வெலிப் பெருமாள் நந்தனரான குலசெகர[3] வற்மரு[ன*] ஞம் வடவாரி நாட்டு கிளாங்காட்டூர் உடையார் திருவக்கினீசுவரமுடைய் நயினருக்கு விளா பூசைக்கு நாளொன்றுக்கு அமுதுபடி முன்னாழியாகவும் கறியமுது உப்பமுது மிளகு அமுது தயிறு அமுது வெள்ளைச் சர்க்கரை பழம் இலையமுது அடைக்காயமுது சாத்துப்படித்திரவியம் எண்ணைக் காப்பு திரு விளக்கெண்ணெ பஞ்சாமிருதத்துக்கு வெண்டின வகையாக இது வகை வைக்க வெண்டும் படிக்கு நாம் தெவதானம் பாட்டமாக விட்ட நிலம் ஊர்த்துப் புறிவு கிளாங்காட்டூரில் நாலாங் கண்ணுரு தடி ஆருமா அஞ்சாங் கண்ணுரு தடி அஞ்சு மிது நிலம் அரைக்காணியும் தெற்குப் புறவு நாலாங் கண்ணுறு தடி மூனு நிலம் அரைக்காணியும் கீழ்நிலம் காணி அரைக் காணியும் பரமனெரி னிலம் அரைக்காணியும் அமுது வைப்புக்கு மாவடிக் கண்ணுறு [த]டி ௩ ரூ ஷஹம் பத்தாங் கண்ணுறு நிலம் காணி முந்திரையும் பதினெருங் கண்ணுறு தடி ஒன்று நிலம் அரைக்காணி முந்திரையும் இன்னிலம் ரூ இ-யும் தடி ஒண்ணு நிலம் ஆறு மாக்காணியும் தடி ஒண்ணு நிலம் அரைக் காலும் இன்னிலம் இரண்டுமாவும் இன்னாள் முதலுக்கு நாம் கொள்முதலாக விரைப்பாடு எளப்பிவித்தும் நம் வரியில்லாக் கணக்கிலுந் தவிர்த்து தெவதானம் பாட்டமாக கல்லுலும் செம்பிலும் வெட்டிக் கையாண்டுக்கொள்ள வேண்டியது [॥*]

சாசனம் — **951**] [D. 3742-ம

ஷை கோவிலுக்குத் தென்பக்கத்தில் மண்டபத்திலிருந்த சிலா சாசனம்.

பாண்டிய மன்னன் கொ மாறபன்மரான திருபுவன சக்கர வர்த்திகள் சொணாடு கொண்டு முடிகொண்ட சொழபுரத்து விஜயாபிஷெகம் பண்ணி அருளிய ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவ

---

1. 'திரிபுவன சக்கரவர்த்திகள் கொனெரின்மை கொண்டான் ஸ்ரீ பெருமாள் அபிராம பராக்கிரம பாண்டிய் தெவர் நந்தனரான பெருமாள் ஸ்ரீ பராக்கிரம பாண்டிய தெவர்க்கு' என்று வாசிக்க.

2. திருவாங்கூர் வெளியீட்டில் இது 'உத்திராடத்தி னுள்' என்று காணப்படுகிறது.

3. இந்தப் பெயரை 'அபிராம வர்மர்' என்று வாசித்திருக்கிறார்கள்.

னுடைய ஆட்சியின் 20-ஆம் ஆண்டுக்கு எதிராம் ஆண்டு, கார்த்திகை வியாழக்கிழமை பெற்ற நாள் கல்வெட்டு. வடவாரி நாட்டுக் கிளாங்காட்டூரில் திருவக்கிநீசுவரமுடைய நாயனர் கோயிலில் இரண்டு நந்தாவிளக்கு எரிக்க நந்தா விளக்குப்புறமாகக் கீழைப் பொன்னறையில் ஒரு மா நிலம் அளிக்கப்பெற்ற செய்தியைத் தெரிவிப்பது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், VII வால்யூம், 31 (b) நெ. ஆக வெளியிடப் பெற்றுள்ளது.

சாசனம் — 952] [D. 3742-மக

ஷை கோவிலுக்குக் கிழக்குப் பக்கத்திலிருந்த சிலா சாசனம்.

பாண்டிய மன்னன் கொ மாறபன்மரான திருபுவன சக்கரவர்த்திகள் சொணுடு கொண்டு முடிகொண்ட சோழபுரத்து வீராபிஷெகம் பண்ணி அருளிய ஸ்ரீசுந்தர பாண்டிய தேவனுடைய ஆட்சியின் 20-ம் ஆண்டுக்கு எதிராம் ஆண்டுக் கல்வெட்டு. ஆரம்பம் மட்டுமே உள்ளது. வட்வாரி நாட்டுக் கிளாங்காட்டூர் உடையார் திருவக்கிநீசுவரமுடைய நாயனர் கொயில் பெயர் காணப்படுகிறது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், VII வால்யூம், 31 (a) நெ. ஆக வெளியிடப் பெற்றுள்ளது.

சாசனம்—953] [D. 3742-மஉ

ஷை கோவிலுக்குக் கிழக்குப் பக்கத்திலிருந்த சிலா சாசனம்.

இது திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரீஸ், I வால்யூம், 275-76-ஆம் பக்கங்களில் 'S' குறியிட்ட சாசனமாக வெளியாகியுள்ளது. அங்கே சாசனம் குறையாக நின்று விடுகிறது.

On the east wall of the mahāmaṇḍapa in front of the central shrine in the temple of Jamadagnīśvara svamin. Record dated in S'aka [1479], Vibhava, Aṟpas'i 24, ba. saptami, Friday, Pushya corresponding to the 5th year in the reign of the Later Pāṇḍyan king Jaṭilavarman *alias* Tribhuvana chakravartin Kōnērinmai koṇḍan **Alagan Perumal Ativiraraman** *alias* **Srivallabhadeva,** the son of Tirunelvēlipperumāḷ Vīraveṇbamalai **Kulaśēkhara dēva** and grand-son of Abhirāma Parākrama Pāṇḍya **dēva** registering the appointment of S'ri Kailayam-uḍaiyār Maṟaittiru Vaṇādaperumāḷ of Kiḍarattūr in Ulagu-chintāmaṇi vaḷanāḍu as the accountant of the temple [of god Tiruvagnis'vara] at Kiḷaṅgāttūr in

Vaḍavari-nāḍu. The order is issued as if made by the god through the traditional executive Ādi-chaṇḍēśvara.

This has been published as item 'S' in the **Travancore Archaeological Series**, Vol. I. pp. 275-6.

ஸ்வஸ்திஸ்ரீ[|*]

பராக்கிர ருஜகூல விருத்தி நாம்

சாத்திர வித்தியாத சாரிணும்

அகல விதல திருவிக்கினீசுவர

சியாமெஷி ஸ்ரீ பிபிசா வனம்[1]

அதி சண்டெசுரு ஸ்ரீ புவனஞெய மாக சக்க றவர்த்திகளில் [கூ*] [ச]³ாளயிகூ-ன் மெல் செல்லா னின்ற கொல்லம் புவனெக வீர சகல குண சம்பன்னரான ஆதவராம னந்தன[2] கெரள தமொ திவாகர சொள சிந்து வடவானல சங்கீத சாயுச்சிய[3] வித்தியா விஞெத விஷததிக ஸ்ரீ[4] கொ சடிலவர்ம்ம ரான (ஸ்ரீ) [திரி]புவன சக்கிரவர்த்தி கொனெர்மை கொண்டான் அபிரும பருக்கிரும பாண்டிய தெவார னந்தரான அளகன் பெருமாள் திருநெல்வெலிப் பெருமாள் வீர வெண்[பா*]மாலை(ம)[ய]ரய குலசெகர தெவரா னநத(க)[ந]ரான அளகன் பெருமாள் அதிவீரராமப் பேருமாள் ஸ்ரீ வில்லிபுத்தூர் தேவருக்கு[5] ஆண்டு ஸ்ரீ புவன[6] விபவ ஸு அர்ப்பிசி மீ உயிச வ அபர பக்ஷத்து சப்தமியும் சுக்கிர வாரமும் சிங்க கரணமும் பூசத்து நாள் பெற்ற உலகு சிந்தாமணி வளநாட்டு கிடாரத்தாற்ச் சிகையிலாய முடையார்

---

1. இந்தச் சுலோகம் சரியாக விளங்கவில்லை. திருவாங்கூர் வெளியீட்டில் இது பின் வருமாறு தமிழும் கிரந்தமும் கலந்து எழுதப்பட்டுக் காணப்படுகிறது.

பாத்திஹ சஞ்ருலி விருத்திநாம்

ச[ா]க்கிறவத்தி [யூ]ாந ஸாரிணாம் [।*]

அஹாசீ திருவக்கினீஸ்வாஸ்ய

ஸ்வமெச ஸ்யாபி சாஸநம்[॥*]

2. 'ஆதி சண்டெஸ்வராஜெயம் [॥*] சகாப்தம் கூசாஅயிகூ-ல் மெல் செல்லா நின்ற ஸ்வஸ்தி ஸ்ரீ புவநெக வீர சகல குண ஸம்பன்ன ஆதவராம னந்த' என்று திருவாங்கூர் வெளியீட்டில் காணப்படுகிறது.

3. 'சாஹித்ய' என்று வாசிக்க.

4. 'ஸ்வஸ்தி ஸ்ரீ' எனத் திருத்துக.

5. 'ஸ்ரீ வல்லப தேவருக்கு' என்று வாசிக்க.

6. 'யாண்டு டு-வது' என்று காணப்படுகிறது.

மாசதவெனுகப் பெருமாளுக்கு[1] வடவாரி நாட்டு கிளாங்காட்டூர் [நம*]ர்லேயத்துக்கு தர்மத்துக்காக [கணக்கு][2] காணியாக்ஷியாக கொடுக்கும்படிக்கி [ந*]ம் குமாரன் திருநெ[ல்வெ]லிப் பெருமாள் வீர வெண்பாமாலேயவான குலசெகர தெவர் னந்தன[ரான] அளகம் பெருமாள் அதி வீரராம சுவாமித் தெவர்[3] நம வாச[ல்*] •சுரத்தறக்கு வொலே•வர் விடுகையில் நன் குமாரன் அளகன் பெருமாள் ஆதி நாராயணப் பெருமாள் ஸ்ரீ புவன தெவர்களான ஆலயக் காரியம் சீவலத் தெவனும் நம் ஆலேயங்களுக்கு [கணக்கு] கெண்டிக்கா தெவி தத வீர ராம பாண்டிய தெவனும் நம்மாலேய முதல் ஆ திரு மெனிமாத தாரய ஜமதக்கினிசுராரியங்களுக்கு தெவதானமுடைய ஜமதக்கினீசுவர சுவாமிக்குத் தன்மபத்தாக கணக்குக் காணியாக்ஷியாக ஆசந்திரார்க்கம் சந்ததிப் பிரவேசம் ஆண்ட னுபவித்துக் கொள்வாராகவும் [ப*]

சாம்பூர் வடகரை **Śāmbūr-Vaḍakarai**

ஊரில் உள்ள திருமூல நாதர் கோவிலுக்கு வடக்குப் பக்கத்தில் விமானத்திலிருந்த சிலாசாசனம்.

சாசனம் — **954]** **[D. 3744-மசு**

சுவாமி திருமூலநாதர் பிரதோஷக் கட்டளேக்குப் பிச்சன் உத்தம கங்கன் புண்ணியமாகவும், அம்மை யடியான் புண்ணியமாகக் குமார[க் கடவுளு]க்கு மாதம் தோறும் கார்த்திகைத் திருநாளுக்கும் விந்தனூர் கொதைச்சன் நிலம் கொண்டு விட்ட செய்தியைக் கூறுவது..

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், V வால்யூம், 65 நெ. ஆக வெளியாகியுள்ளது. சாசன எழுத்துக்களின் வடிவைக் கொண்டு இது கி. பி. 1600-க்கு அணித்தான காலத்தைச் சேர்ந்ததாகக் கொள்ளலாம் என்று குறிக்கப்பட்டுள்ளது.

---

1. 'கிடாரத்தூர் சீ கைலாயமுடையான் ம[ன*]றத்திரு வாணதப் பெருமாளுக்கு' என வாசிக்க.
2. இது ஒரு குறியீட்டால் எழுதப்பட்டிருக்கிறது.
3. 'சீ வல்லப தெவர்' என்று வாசிக்க,

சாசனம் —955] [D. 3744-மெ

ஷை கோவிலுக்குத் தென்பக்கத்திலிருந்த சிலா சாசனம்.

On the south wall of the central shrine in the temple of Tirumūlanātha, other wise known as Mūlasthanēśvara in the village. Record dated in the 2nd + 23rd year, Mīna 7, ba. dvādaśi, Kārttigai in the reign of the Pāṇḍyan king Jaṭilavarman *alias* Tribhuvana chakravartin Kula[śekhara?] deva registering the grant of some land to meet the expenses of special worship on the two ashṭami days every month and of lamps etc. in the temple of god Tirumūlanātha at Vindanūr *alias* Parākrama-pāṇḍyach-chaturvēdimaṅgalam by the prince whose name might be restored as Śrīvallabha Perumāḷ. Tachccha Nenmali Uḍaiyan, the signatory of the record also figures in a record of Śrīvallabha dēva. [Vide No. 962].

ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] கொ ஜடிலவன்மற் திரிபுவன சக்கரவத்திகள் மூன்று முடிக்கி முரிய குல தேவருக்கு[1] யாண்டு இரண்டாவதின் எதிர் இருபத்து மூன்ருவது மீன ஞாயற் எழாந் தெதியும் அமற பக்ஷத்து துவாதசியும் உபைய யொகமும் பெற்ற காற்திகை ஞள் குருமரை ஞட்டு விந்த நல்லூற்ருளகமான வராக்ரம வாண்டிய ஸதுர்வெதிமங்கலத்து[2] உடையாற் திருமூல ஞதரானமுடைய நயினுர் கொவில் தாசற்க்கு இன்னயினுர்க்கு இவர் தந்தயருன மல வல்ல [பெருமா]ளா[ன்*]நாம் திருவானந்த விளக்கு[3] இரண்டுக்கும் ஸந்த்யா தீபத்துக்கு மாத மாதம் ஒன்றுக்கு எண்ணெ இருபது இரு நாளிக்கும் சுவாமி பூசைக்கி மாகவு மாத[ம்*] ஒன்றுக்கு அஷட்டமி இரண்டுக்கும் அஷ்ட்டமி ஞள் ஒன்றுக்கு அமுதுபடி நாஞழிக்கிம் ஊ குறுணி இருஞளி அமுது திருமாலே திருவிளக்கு வதுக்கு தெவ தானமாக விட்ட இன்ஞட்டு உருதியான காலப் புறவு தெற்க்கு தென் எல்கை ஆற்றுக்கு வடக்கு மெல் எல்கை வரம்புக்குங்

---

1. அரசன் பெயர் தெளிவாக இல்லே. குலசெகர தெவர் என்று இருக்கலாம்.

2. 'விந்தனூரான பராக்கிரம பாண்டிய சதுர்வெதி மங்கலத்து' என்று வாசிக்க.

3, 'திருநொந்தா விளக்கு' என்று இருக்கலாம்,

கிழக்கு கீழ் எல்கைக்கு தெற்க்கு வட எல்கை பெரும்பத்து உடைய தெற்க்கு இன்னுங்கு எல்கைக்குள்ப்பட்ட நஞ்சை புஞ்சையும் மாவடை மரவடையும் கொடி தொட்டமும் உள்பட்டதும் இன்னுள் முதலுக்கு தெவதானமாக கையர்ண்டு ஆசந்திரார்க்கம் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கையாண்டு பூசையும் திருவானந்தீ விளக்கும் திருமாலையும் நடத்திப் பொகவும். இவை தச்ச நென்மலி உடையான்[1] யெழுத்து [||*]

சாசனம்—956] [D. 3744-மஅ

ஷை கோவிலுக்கு வடக்குப் பக்கத்தில் விமானத்திலிருந்த சிலா சாசனம்.

பாண்டிய மன்னன் கொ ஜடிலவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டிய தேவரான வீர பாண்டிய தேவர் ஆட்சியின் இரண்டாவதன் எதிர் ஐந்தாம் ஆண்டு கும்ப மீ அபர பக்ஷத்துச் சதுர்த்தசியும் ஞாயிற்றுக் கிழமையும் பெற்ற மன்னன் ஆட்டைப் பிறந்த நாளான அவிட்டத்து நாள் வத்ஸ கொத்திரத்து ஆபஸ்தம்ப சூத்திரத்து வங்கிபுரத்து ஸ்ரீகாரிமார பட்டனுக்குக் குறுமறைநாட்டு விந்தனூரான பராக்கிரம பாண்டிய சதுர்வெதி மங்கலத்துப் பாகம் ஒன்றை உதக பூர்வமாக அளித்த செய்தியைத் தெரிவிப்பது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 259–60 ஆம் பக்கங்களில் 'F' அடையாள மிட்ட சாசனமாக வெளியாகி யிருக்கிறது.

சாசனம் — 957] [D. 3744-மக

ஷை கோவிலுக்கு வடமேற்குப் பக்கத்தில் விமானத்திலிருந்த சிலா சாசனம்.

பாண்டிய மன்னன் கொ ஜடிலவர்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் பொன்னின் பெருமாள் பராக்கிரம பாண்டிய தேவரான வீர பாண்டிய தேவருடைய ஆட்சியின் இரண்டாவதன் எதிர் ஐந்தாம் ஆண்டு துலா மீ 14உ பூர்வபக்ஷத்துத் துவிதியையும் வியாழக் கிழமையும் பெற்ற அனுஷத்து நாள் கல்வெட்டு. குறுமறை

---

1. இதில் கையெழுத்திட்டுள்ள தச்ச நென்மலி யுடையான் ஸ்ரீ வல்லப தேவனுடைய ஆட்சிக் காலத்துச் சாசனம் ஒன்றிலும் அதிகாரியாகக் கையெழுத்திட்டுள்ளான். பின்னுல் 962 நெ. சாசனம் பார்க்க.

நாட்டு விந்தனூரான பராக்கிரம பாண்டிய சதுர்வெதி மங்கலத்துப் பாகம் இரண்டை இரு பிராமணர்களுக்குத் தானம் அளித்த செய்தியைத் தெரிவிப்பது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 257–58 ஆம் பக்கங்களில் 'E' குறியிட்ட சாசனமாக வெளியாகி யிருக்கிறது.

செங்கோட்டை — Śeṅkōṭṭai

செங்கோட்டைக் கரை வாசலுக்குச் சேர்ந்த கஸபா செங்கோட்டையில் அழகிய மணவாளப் பெருமாள் கோவிலிலே விமானத்தில் மேற்குப் பக்கத்திலிருந்த சிலாசாசனம்.

சாசனம் — **958**] [D. 3737

பாண்டிய மன்னன் கொ ஜடிலவர்மரான திரிபுவன சக்கர வர்த்திகள் ஸ்ரீ அழகன் பெருமாள் ஸ்ரீ வல்லப தேவருடைய ஆட்சியின் இரண்டாவதன் எதிராமாண்டு பங்குனி மீ 7 உ அபர பக்ஷத்துப் பஞ்சமியும் [சுக்கிர வாரமும்] பெற்ற அனுஷத்து நாள் கல்வெட்டு. தென் ஆரி நாட்டு நல்லூர்ப் பற்றுக் கீழ் பிடாகை செங்கொட்டை நாயனூர் குலசெகர விண்ணகரப் பெருமாள் கொயில் ஜீர்ணோத்தாரணமாகத் தங்கச்சி வென்று மாலையிட்ட பெருமாள் திருப்பணி செய்து நாயனூரையும் நாச்சியாரையும் எழுந்தருளுவித்து ஸ்ரீவல்லபன் சந்தி பூசைக்கும் மற்றும் வெண்டும் நிவந்தங்களுக்குமாக வட ஆரி நாட்டுப் பைம்பொழில் பற்று மெல் பிடாகையில் கரடிப் பாறை ஆன பராக்கிரம பாண்டிய நல்லூர் சூடிக் கொடுத்தாள் ஏரி அரசன் குளம் உள்ளிட்ட பற்று நிலம் அளித்த செய்தியைத் தெரிவிப்பது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், VII வால்யூம், 37 செ. ஆக வெளியாகியுள்ளது.

சாசனம் — **959**] [D. 3738

அழகன் பெருமாள் கோவில் விமானத்தில் [கர்ப்ப கிருகத்தின் முன்னுள்ள மண்டபத்தின்] வடபுறம் சுவரில் எழுதியிருப்பது.

புவநெக வீரன் சந்திர குல பிரதீப கொ ஜடிலவர்மரான திரிபுவன சக்கர வர்த்தி கொனெரின்மை கொண்டான் ஸ்ரீ அழகன் பெருமாள் அபிராம பராக்கிரம பாண்டிய தெவர் நந்தனரான குலசேகர தேவரான பராக்கிரம பாண்டிய தேவர் ஆட்சியின் மூன்று

வது ஆண்டுக்குச் சரியான சகாப்தம் 1467, விசுவாவசு ஸு...... அபரபக்ஷத்து ஏகாதசி [சுக்கிரவாரம்] பெற்ற உத்திரத்து நாள், கல்வெட்டு. தென்னுரி நாட்டு......நாயக சதுர்வெதி மங்கலத்து நாயனூர் குலசெகர விண்ணகர எம்பெருமானுக்குத் திருவிடையாட்டமாக நிலம் அளிக்கப்பட்ட செய்தியைத் தெரிவிப்பது. பூர்த்தியாக இல்லை.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 266-67 ஆம் பக்கங்களில் 'K' குறியிட்ட சாசனமாக வெளியாகியுள்ளது.

சாசனம் — **960**] [D. 3739

குலசேகர நாதர் கோவில் விமானத்தில் தென்பக்கத்திலிருந்த சிலா சாசனம்.

புவனைகவீர சந்திர குலப் பிரதீப கொ ஜடிலவர்மரான திரிபுவன சக்கரவர்த்தி கொனெரின்மை கொண்டான் ஸ்ரீ பெருமாள் அபிராம பராக்கிரம பாண்டிய தெவர் நந்தரான ஸ்ரீ பெருமாள் குல சேகர தேவரான பராக்கிரம பாண்டிய தெவனுடைய ஆட்சியின் மூன்றும் ஆண்டும் சகாப்தம் 1467 ஆண்டும் கொண்ட விசுவாவசு ஸு அற்பசி மீ 30 உ அபரபக்ஷத்து ஏகாதசி, சுக்கிரவாரம் பெற்ற உத்திரத்து நாள் கல்வெட்டு. தென்னுரி நாட்டுச் செங்கொட்டையில் உடையார் குலசெகரமுடைய நாயனூர்க்குத் தெவதானம் பாட்டமாக அரசன் நிலம் அளித்த செய்தியைத் தெரிவிப்பது.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 103-104 ஆம் பக்கங்களில், VI சாசனமாக வெளியாகியிருக்கிறது. அதன் கடைசிவரியில்புள்ளியிட்டு காட்டப் பெற்ற இடத்திலே, மக்கென்ஸியின் பிரதியில் 'ஒக்கூருடையான் எழுத்து. உ' என்பது காணப்படுகிறது.

மார்த்தாண்டபுரம் Mārttāṇḍapuram

இவ்வூர் 'செங்கோட்டைக் கறைவாசலுக்குச் சேர்ந்த இளாங்காடு மணியத்தில் உள்ள' தாகக் குறிக்கப்பட்டிருக்கிறது.

சாசனம் — **961**] [D. 3745

ஊருக்கு வடக்குப் பக்கத்தில் எல்லைக் கல்லிலிருந்த சிலாசாசனம்.

On the boundary stone set up to the north of the village.

Record dated in Śaka 1522, Vyaya, Tai 12, corresponding to the 38th year of the reign of the Later Pāṇḍyan king **Alagan Perumal Ativirarama** *alias* **Srivallabhadeva** registering the creation of a new village Srival[l*]abha-nallūr. Perumaḷ Śrivallabhadeva, 'who revived the past' is referred to in the record.

கெண்ட திரு வீட்டுக்கு ஊட[1] சகாப்தம் ௲௫௱௨௰௨-ன் மெல் செல்லா னின்ற ஸ்ரீ பெருமாள் அளகன் பெருமாள் அதிவீரரும ஞன ஸ்ரீ வல்லப தேவருக்கு யாண்டு ௩௰அ-வது விய ஷூ தைய் மீ ௰௨-தி ஸ்ரீ பெருமாள் இறந்த கால மெடுத்த சீவல மாரன் பண்டாரத்தில் கிளாங்காட்டூர் மாடைப் பிறத்துக் குடியெற்றிவிக்க சீவலவ நல்லூருக்கு எல்லைகையாவது: கீள் எல்லை மெல்ப்படியூர்புதுக்குளந் திரு[த்*]துப் பத்துக்கு மெற்க்கு தென்னெல்லை ராநதைக்கி [வடக்கு] மெல் எல்லை கல்வெட்டுங் குளிக்கு [கிழக்கு] வட எல்லை பராக்கிறம பாண்டிய பெரியூருக்குத் தெற்க்கு ஆக இன்னான் கெல்லைக்குள்ப்பட்ட குறியிருக்கிற பலற்கும்...............ஆக யிந்தப்படியும் வந்தெறுங் குடிக்கு ஆறு மாத[த்*]தைக்கு இறையில்லாமலுங் குடியிருப்பாராகவும். விடை பமட [கணக்கு] வீட்டு ௫ ௨ ௪ ௨, இந்தப்படிக்கு னாருடையான் எழுத்து [||*]

விந்தனூர் — Vindanūr

மக்கென்ஸயின் பிரதியில் இவ்வூர் 'செங்கோட்டைக் கறவாசலுக்குச் சேர்ந்த சாம்புவர் வடகரை மணியத்துக்குச் சேர்ந்த விந்த நெல்லூர்' என்று குறிக்கப்பட்டிருக்கிறது.

சாசனம் — **962**] [D. 3743-ல

அவ்வூரில் பாழுங் கோட்டையில் உள்ள அழகிய மணவாளப் பெருமாள் கோவிலுக்குத் தென்பக்கத்திலிருந்த சிலாசாசனம்.

On the south wall of the temple of Aḷagiya-maṇavāḷapperumaḷ, otherwise known as Sundararājaperumaḷ. Record dated in the 2nd + 10th year, Rishabha 7, ba. dvitīya, Sunday, Mūla, in the reign of the Pāṇḍyan king Jaṭilavarman *alias* Tribhuvana chakravartin **Srivallabhadeva** registering the gift of 10 *mā* of land as *tiruviḍaiyāṭṭam* to meet the expenses of the daily worship, offerings, garland, lamps, etc. to god Aḷagiya-maṇavāḷap-perumaḷ of Vindanūr in Kurumarai nāḍu.

---

1. இந்தப் பகுதி விளங்கவில்லை.

ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] கோ ஜடிலவர்மரான திரிபுவன சக்ரவர்த்திகள் ஸ்ரீ வல்லபதேவர் நம் யாண்டு இரண்டாவதின் எதிர் பத்தாவது. ரிஷப ஞாயறு எ உ-ந் தியதியும் சுவாதிநக்ஷத்து துதியையும் நாயிற்றுக் கிழமையும் பெற்ற மு(த)லத்தின்னாள் குறுமறை நாட்டு விந்தனூரில் நாயனார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருவாராதனத்துக்கு அமுது படி பாலமுது படி நெய்யமுது திரு விளக்கு எண்ணை எண்ணைக் காப்புத் திருமாலை திருப்பரிவட்டம் சாத்துப்படி இலையமுது அடைக்காய் அமுது உள்ளிட்ட நி[த்*]தி நியமத்துக்கு திருவிடையாட்டமாக விட்ட நிலம் பத்துமாவுக்கு இன்னாட்டு இவ்வூரில் பெறிய குளத்தின் கீழ் கண்டுழவில் விட்ட உக உ-ருமாவும் திருப்பில் விட்ட உரு மாவும் ஆக உ ய-மாவுக்கும் நம் அதிகாரி தடைக் கூட்டாள[இ]டடு வரக் காட்டினதை தட்டிப்படி பலாற்றுக்கு மெற்க்கு ச-ங் கண்ணாறும் ரு-ங் கண்ணாறும் தடி பல விட்ட கிழக்கு [காலிடை][1] க உ. உஹு கீழ ஙூ--ல் கீழக் கடை ய உ ரு வதம் [இதன்][2] தெற்கு [காலிடை] க உ. உ கீழ் சூ ம இதன் கிழக்கு காலிடை கஉ உஷவறம் [இதன் காலிடை] வடமெற்க்கு [காலிடை] உஉ சபு ரு-ம் [இதன்] கிளக்கு கஉ உளசூம் [இதன்] தென் மெற்க்கு [காலிடை] உஉ உ ங வதளம் [இதன்] வட கிழக்கு [காலிடை] உசபு வதகளும் ரு-ங் கண்ணாறு மெற்க்கு காலிடை க. உ ஙவதவிம் [இதன்] மெற்க்கு [காலிடை]கஉ தஙப இதன் மெற்க்கு காலிடை கஉ உஙவத எ-கூம் இதன் மெற்க்கு காலிடை க உ உவத எதா இதன் மெற்க்கு காலிடை கஉ உவத எம் இதன் மெற்க்கு காலிடை கஉ உங எம் ஆ உ ரு மாவும் பலாற்றுக்கு கிழக்கு ரு-ங் [கண்ணாறுக்] கிழக்கு காலிடை கஉ ஙவதம் [இதன்] தென் கிழக்கு [காலிடை] க உ வதம் [இதன் காலிடை] கிழக்கு காலிடை கஉ உஙதவதகூஊ [இதன்] தென் கிழக்கு காலிடை உஃ ரிஎஙூம் [இதன் வடக்கு] காலிடை கஉ உஙூம் [இதன்] கிழக்கு ஙஉ உளஙூம் இதன் வடக்கு கி க உ ரிள தாம[இதன்] கிழக்கு காலிடை கஉ ஷஎ[இதன் கிழக்கு காலிடை] க உ ரிவதஙூம் [இதன்] தெற்கு காலிடை க உ உவதஙூ இதன்] வடகிழக்கு காலிடை ஙஉசபு வத எசளம [இதன்] தென் கிழக்கு காலிடை கஉ உம் [இதன் கிழக்கு] காலிடை கஉ ரிளதல

---

1. 'கலி' என்பதைக் கூட்டெழுத்தாக எழுதிய மாதிரி சூ போன்ற ஒரு குறியீட்டால் எழுதப்பட்டிருக்கிறது.

2. 'இட' அல்லது 'இஉ' என்பதைக் கூட்டெழுத்தாக எழுதித ஒரு குறியீடாக இருக்கிறது.

[இதன்] வடக்கு காலிடை உவ ஊஸூவுத எம [இதன்] வடக்கு தாலிடை கவ ஊவுத ஸூம [இதன்] மெற்க்கு காலிடை கவ ஊஜ தா [இதன்] கிழ்க்கு கலி உவ ஙிவுத ஊ கலிஞு [இதன்] வட மெற்கு கலி கூவ வுத ள ஸூ [இதன்] கிழக்கு கலி கவ ஙிஜ [இதன] மெற்க்கு கலி கவ ஊளத [இதன்] கிழக்கு கலி கவ [இதன் வட]மெறக்கு சடை யஉவுததும் ஆூ கவ ரு மாவும் ஆ இவ் வகைப்படி ய. மாநிலமும் (இரண்டாவதின்) உ-வதின் எதிர் ய-வது பசான முதலுக்குத் திருவிடையாட்டமாக கண்டுழவில் விட்ட உ ரு மாவும் கண்டுழவாக உழுவீத்து கொண்டு மதிப்பில் விட்ட உருமாவுக்கும் திரப்ப மரியாதிகரம் கொள்ளும்படியும் கற்பித்தருளவக்கு இம் மரியாதியிலெ இவ்வெல்லை பிடிபாடாக கல்லிலும் செம்பிலும் வெட்டி கையாண்டு திருவாராதனம் நடத்திப் பொகவும். பாறக்க. இவைத் தச்ச நென்மலி உடையான் கையெழுத்து[1] [||*]

சாசனம்—963] [D. 3743-யச

ஷை கோவிலுக்கு வடக்கு விமானத்திலிருந்த சிலா சாசனம்.

இதுபோன்ற சாசனம் ஒன்று அவ்வூரில் மூலஸ்தானேச்வரர் கோவிலில் அம்மன் கோவில் முன் மண்டபத்துக் கிழக்குப் புறச் சுவரில் பொறிக்கப்பட்டிருப்பதாகத் திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 262-63-ஆம் பக்கங்களில் 'H' குறியிட்டு வெளியாகி இருக்கிறது.

On the north wall of the central shrine in the same temple. Record dated in the 2nd+9th year, Tulā 2, ba. daśamī, Friday, Śatabhishaj in the reign of the Later Pāṇḍyan king Jaṭilavarman *alias* Tribhuvana chakravartin **Alagan Perumal Parakarama Pandyadeva**, registering the grant of some lands to the *Śrīvaishṇavas* of the temple of Aḻagiya-maṇavāḷapperumāḷ at Vindanūr in Kurumarai-nāḍu for the mid-day *pūja* to the god, by prince Parākrama Pāṇḍya, born in the asterism Tiruvādirai and the younger brother of the king.

A similar inscription said to be engraved on the east wall of the maṇḍapa in front of the Amman shrine in the Mūlasthanēśvara temple at Sambūr-Vadakarai has been published as item 'H' in pages 262-63 of the **Travancore Archaeological Series**, Vol. I.

---

1. நில அளவைக் குறிக்கும் குறியீடுகள் அதிகமாக இந்தச் சாசனத்தில் பயிலப்பட்டுள்ளன. அவற்றையும் சரியாகப் பெயர்த்தெழுதாமையால் நன்கு விளங்கவில்லை,

ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] கொ ஜடிலவர்மரான த்ரிபுவந சக்ரவர்த்திகள் அண்ணுழ்வி அழகன்(ப்) பெருமாள் பராக்கிரம பாண்டிய தேவருக்கு யாண்டு இரண்டாவதின் எதிர் ஒன்பதாவது துலா ஞாயறு ரெண்டாந் [திய*]தியும் அபர பக்ஷத்து நாள் தஸமியும்[1] ஸுக்ரவாரமும் பெற்ற ஸதெயத்து நாள்: திருவாதிரை நாட் பிரந்(து)[த] பராக்கிரம பாண்டிய தெவர் என்று பெர் உடைய நாம் குருமரை நாட்டு விந்தனூர் நயினர் அழகிய மணவாளப் பெருமாள் நயினர் திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு: இன்னயினருக்கு உச்சந்தி திருவாருதனைக்கு திருவிடையாட்டமாக விட்ட இவ்வூர் ஒட்டன் குளமான அழகிய மணவாளப் பெருமாளுக்கு[2] பெரு நாங்கு எல்கையாவது; கீழ் பெல்கை பெரிய [3] குளத்தில் நீர்க்காலுக்கும் கொட்டைக்கு ளுக்கெ [மேற்கு] தென் எல்கை செங்குளத்துக்கும் ஆயிக்குடிக்கும் பொறவழி மெ வடக்கு மெல் எல்கை பஞ்சபாண்டவர்கள் படுக்கை ஒடைக்குக் கிழக்கு வட யெல்கை திழைடை பெரு வழிக்கும் பெரிய குளத்து நீர்க்கல்லுக்கும்[4] தெற்கும[ாக*] இன்னுங்கு எல்லைக்குள்பட்ட நஞ்சை புஞ்சை மாவடை மறவடை கொடித் தொட்டம் (ப)[ம]த்தும் எ[ப்பெ*]ர்ப்பட்ட ஸமஸ்த ப்ராப்திகளும் திருவிடையாட்டமாக கையாளும்படியும் கற்பித்து யிந்தக் குளத்தில் பாரிலெ நம்பு (த்)ஷாமரைக் கண விருத்தியாக்கு[5] கெத நிலம் ஒரு மாவும் திருவாராதனைக்கு நடத்திப் பொகவும் [||*]

சாசனம்—964] **[D. 3743-ஈ**

டி கோவிலுக்கு மேற்குப் பக்கத்திலிருந்த சிலா சாசனம்.

திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் சீரிஸ், I வால்யூம், 271-2-ஆம் பக்கங்களில் 'O' குறியிட்டதாக இது பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவ்விடத்திலே குறையாக உள்ள இச் சாசனம் மக்கென்ஸி பிரதியில் பூர்த்தியாக இருக்கிறது.

---

1. மேலே குறிப்பிட்ட பிரதியில் 'த்வாதசி' என்று காணப்படுகிறது.

2. 'அழகிய மணவாளப் பெரொரிக்கு' என்று வாசிக்க.

3. இது ஒரு குறியீட்டால் எழுதப்பட்டிருக்கிறது.

4. 'கடையம் பொழுலப் பற்றுக்கும் பெரிய குளத்தில் நீர் நக்கலுக்கும்' என்று மற்றப் பிரதியில் காணப்படுகிறது.

5. 'செந்தாமலைக் கண்ணூர்க்கு' என்று வாசிக்க,

On the west wall of the same shrine. Record dated in Śaka 1472, corresponding to the 7th year, Sādhāraṇa, Uttarāyaṇa, Mithuna 19, Monday, Śu. dvitīyā, Punarvasu, corresponding to A. D. 1550, June 16, in the reign of the Later Pāṇḍya king Jaṭilavarman *alias* Tribhuvana chakravartin Kōnērinmaikoṇḍān **Kulasekharadeva** *alias* **Parakrama Pandyadeva**, the son of Abhirāma Parākrama Pāṇḍyadēva registering the appointment of Aḻagiya S'okkanār Sundarattōḷuḍaiyān of the Kauśika-*gōtra* and the Bōdhāyana *sūtra* as the hereditary accountant on a salary of $\frac{3}{4}$ *paṇam* and $\frac{3}{4}$ *kōṭṭai* of paddy per mensem in the temple of Gōvindarājapperumāḷ at Vindanūr by Tirunelvēlipperumāḷ, the son of Abhirāma Parākrama Pāṇḍyadēva and who was born in the *nakshatra* Aśvati.

This has been published as item 'O' in pages 271-2 of the **Travancore Archaeological Series,** Vol. I. where the text is incomplete.

வந்தக்ஸ்ருவாதிதெவநாம் இளமிராகெர்ஷ முஇலக்ஷ ।
விந்தாவாஸ ஹராஸ்ரிஷொ மௌவிஹராஜ ஶாஸநம் ॥[1]

[ஶகாப்தம்*] ஆசாஎயிஉ-ன் மேல் செல்லா நின்ற ஸ்வஸ்தி ஸ்ரீ
கொ ஜடிலு வஜ்ரரான திரிஹுவந சக்ரவர்த்தி கொனெர்மை கொண்
டான் அபிராம பராக்ரம பாண்ட்ய தெவர் நந்தனரான நம் குலாரன்
குலசெகர தெவரான பராக்ரம பாண்ட்யதெவருக்கு யாண்டு எ-வா
வது ஸாதாரண வருஷத்து உத்தராயணத்து மிதுந ரவி யகூ-தெ
தியும் வூர்வ பக்ஷத்து த்விதீயையும் ஸோமவாரமும் ந...ர...ரத

---

1. இந்தச் சாசனம் மிகவும் பிழைபடப் பிரதி செய்யப்பட்டுள்ளது. இதன் சரியான உருவம் பின் வருமாறு:

வந்தத் ப்ருஹ்மாதி தேவாநாம் மௌலிமாலாயித ஶ்ரியம் ।
விந்தாவாஸி ஹரிவிஷ்ணோ மே விந்தராஜ ஶாஸநம் ॥

இதன் தமிழ் மொழி பெயர்ப்பு

பிரம்மா முதலிய தெவர்கள் வணங்குவதால் அவர்களுடைய முடிகளை மாலையாக அணிந்த பாதங்களையுடையவரும் விந்தாபுரியில் வாசம் பண்ணும் விஷ்ணுவுமான கோவிந்தராசருடைய சாசநம்,

யெம்மும் ஸ..............மும் பெ.............வளர.........[1] கௌசிக கோத்ரத்து போதாயன ஸூத்ரத்து அழகிய சொக்கனார் சுந்தற தேவருடையாளுக்கு[2] நம் வீட்டுக்கு நம் கணக்குக் காணியாக்ஷியாகக் கொடுத்து மாதம் ஒன்றுக்குப் பணம் முக்காலும் கொட்டை முக்காலும் [.......] அசலுக்கு ஒத்த ஸூதங்களும் கொடுத்து கற்பித்து நம் குமாறன் ஸுஹிராஜ வராஹராஜ வாணஜ்ய தேவர் நந்தநாவு ஸுஷுதீ நக்ஷத்திரத்து ஜாதனாய(ர்) பெருமா(ளுக்கு)[ள்] திருநெல் வெலிப் பெருமாள் ஓலை நம் காரியம் பார்க்கும் கோனெரி அப்பனும் நம் காரியக் கணக்கு களியனும் நம் கானிதாக்[3] கணக்கும் வளத்துருவாக்கும் பெருமானும் ஸாமுத்து வெங்கடத்துரைவானும் நம்முடன் வந்து சொல்லுகையால் சுந்தறத் தெவருடையானுக்கு[2] நம் கணக்கு காணியாக்ஷியாகக் கொடுத்து மாஸம் ஒன்றுக்கு முக்கால்ப் பணமும் முக்கால் கொட்டை நெல்லும் பற்றிக் கொண்டு நம் வீட்டில்க் கால ஆதாயத்துக்கும் கணக்கும் எழுதிக்கொண்டு ஆசந்த்ரார்க்கவரை ஸந்ததி ப்ரவேசமே செம்பிலும் சிலையிலும் வெட்டி கையாண்டு கொள்ளவும் [|*]

---

1. இந்த இடம் சாசனத்தில் காண்பது போலவே ஒரு வகையாக் கிரந்தமும் மலையாளமும் கலந்து எழுதியிருக்கிறது. 'வ்யாவாத யோமமும் ஸிம்ஹகாரணமும் பெற்ற வாணர்வம்சத்து நாள் கோதகுல ஸஹெயாரில்' என்று திருவாக்கூர்ப் பதிப்பில் கண்டபடி பூர்த்தி செய்து வாசிக்க.

2. 'அழகிய சொக்கனான சுந்தரத்தொளுடையானுக்கு' என வாசிக்க.

3. 'தானிகர்' என்று வாசிக்க.

மைசூர் ராஜ்யம்

MYSORE STATE

இவ்விடம்கொடுக்கப்பட்டுள்ள 14 சாசனங்களும் மைசூர் ராஜ்யத்தில் ஹாஸன் ஜில்லாவில் கிடைத்தவை என்றே தெரிகிறது. அவை தமிழில் உள்ள சாசனங்கள் அல்ல; கன்னடத்திலும் ஸம்ஸ்கிருதத்திலும் உள்ளவற்றின் தமிழாக்கம்.

ஆசனம் (ஹாஸன்) — Hassan

ஹாஸன் ஜில்லாவின் தலைநகராக விளங்குவது. ஊரிலே உள்ள விருபாக்ஷ சுவாமி கோவிலில் [ரங்க மண்டபத்தின் பக்கத்திலே உள்ள ஒரு கல்லில்] காணும் சாசனம்.

சாசனம் —965] [D. 2783

கல்லில் காணப்படும் சாசனம் கன்னட மொழியிலும் லிபியிலும் உள்ளது. அதன் தமிழாக்கமே இவ்விடம் உள்ளது. இதிலே கிரந்த எழுத்தில் வரும் பகுதி எட்டிலே தெலுங்கு எழுத்தில் காணப்படுகிறது.

கன்னட சாசனம் எபிகிராபியா கர்நாடிகா, V வால்யூம், ஹாஸன் 1 செ. ஆக வெளியாகியுள்ளது.

[On a stone near the ranga-maṇḍapa] in the Virūpaksha temple Tamil version of a Kannaḍa record dated in Śaka 1454, Khara Vaiśākha, S'u. pañchamī, Monday in the reign of the Vijayanagara king **Achyutadevaraya Maharaya** registering the gift of the village Uddūru, to the temple of god Virūpaksha of Hāsan by Ellappan, son of Tipparāja [who was the sister's son of Chennapaṇṇa, an officer of the king]. The gift was made over to Dēvara-Bhaṭṭa, agent of the temple to meet the expenses of feeding twelve brahmaṇas every day and for the worship in the temple, for the merit of the above-said Chennapaṇṇa.

The Śaka year was current for the cyclic year **Khara**. The other details of the date are irregular.

The original record has been published as Hn. 1 in the **Epigraphia Carnatica**, Vol. V.

நமஸ்துங்க ஶிரஶ்சும்பி சந்த்ர சாமர சாரவே |
த்ரைலோக்ய நகராரம்ப மூலஸ்தம்பாய ஶம்பவே ||

விசயாப்புதைய சாலீவாகன சகை ௲௪௱௫௰௩ கற வருஷம் வைசாக சுத்த பஞ்சமி சொம வாறத்திலெ ஸ்ரீமன் மகாருசாதி ருச ருச பூறமெசுவற அச்சுத மகாருயூர் விசய நகரி பட்டணததிலெ சுக சாம்பிருச்சியாதி ருச பொகத்தை ரெக்ஷிச்சுக் கொண்டுயிருந்த ஸ்ரீ நறசிங்கன மகன் வீரகிஷ்ணருயனுக்கு தம்பி: வித்தியா நகரி பட்டணத்திலெ எவ்வருச்சிய பரிபாலன பண்ணின திருமலைருயன் குமாரம் சென்னப்பண்ணருயன் ஸ்ரீ மகாதெவ பூசாபறனுயிருக்குரவன் கவி செனங்களை ரெக்ஷிக்கிரவன் : திப்பருச கெற்பபத்துதுலெ உண்டாயிருக்குர எல்ல பூபனுக்கு குடுத்த ஆசனத்து சீமை வ[ட]க்கு புறத்திலெ உத்தூர் எங்குர கிருமம் எல்லப்பண்ண னுய்க்கன் தங்கள் தன்னுடைய சென்னப்பண்ண ருயனுக்கு புண்ணியம் வறவெணுமென்று ஆசனத்து விறுபாக்ஷ தெவருக்கு குடுத்த ஆசனத்து சீமை உத்தூரு கிருமம் சஹிரண்ணிய தாராவறீ்வக ஆய குடுத்தத்துனுலெ அந்த கிருமத்துக்கு உண்டான அஷ்டபொக முதலான சமஸ்தமும் எல்லப்பனுயக்கற் விறுபாக்ஷ தெவஸ்தானத்துக்கு கற்த்தருயிருக்குர தெவற பட்டருடைய கய்யிலெ சகிறண்ணிய உதக பூருவகமாய் ஸ்ரீ விறுபாக்ஷ லிங்காற்பிதமாய் ஆகவெணுமென்று உன்னெடெ கூட பன்னிரெண்டு பெற்பிருமணற்கள் பொசனம் பண்ணிக் கொண்டு சந்திர சூரியன் உள்ளமட்டுக்கும் நடக்கபடுமென்று குடுத்த ஸ்ரீ அச்சுத ருயற் சென்னப் பண்ணனுக்கு னுயக தனத்துக்கு விட்டு ரெக்ஷிச்ச ஆசன சீமை வடக்கு புறத்துலெ உத்தூரு கிருமத்துலெ சகல பொகமும் தற்மம் பண்ணி விட்ட தற்ம சாசனம்.

ஸ்வதத்தாம் பரதத்தாம் வா யோ ஹரேத வஸுந்தராம் |
ஷஷ்டிர்வர்ஷ ஸஹஸ்ராணி விஷ்டாயாம் ஜாயதே க்ருமி: ||

[யிந்த சாசனம் நறசிங்கருய மகன் கிஷ்ணருயற் தம்பி அச்சுதருயற் காலத்திலெ சென்னப்பண்ண சருதாருக்கு மருமக[ன்]. திப்பனுயக்ககன் (மரு)மகன் எல்லப்பனுயக்கன் விட்டுது. ஆசனத உத்தூரு கிருமத்து சாசனம். உ][1]

---

1. இந்தச் சாசனத்தின் அடியில் 'எல்லப்பன்' என்ற கையெழுத்து தமிழில் வெட்டப்பட்டிருப்பதாக எபிகிராபியா கர்நாடிகாவிலிருந்து தெரிகிறது.

சாசனம் —966] [D. 2783

ஆசனத சீமையிலே சேர்ந்த கித்தனே அக்கிரகாரத்தினுடைய சாசனப் பிரதி.

ஸம்ஸ்கிருதத்தில் உள்ள மூலத்தின் தமிழாக்கம். ஆரம்பப் பகுதி மட்டுமே காணப்படுகிறது. எபிகிராபியா கர்நாடிகா, V வால்யூம், ஹாஸன் 6 செ. ஆக வெளியிடப் பெற்றுள்ள சாசனமே இதற்கு மூலம் போலும். அவ்விதமாயின் இது விஜயநகர மன்னனான கிருஷ்ண தேவராயன் சக வருஷம் 1437, கர ஞூ சிராவணமீ பூர்ணிமையில் பிடித்த சந்திர கிரகணத்தின் போது ஸ்ரீ பர்வதத்திலே மல்லிகார்ச்சுனர் சந்நிதியில் கித்தானெ என்னும் கிராமத்தையும் அதன் படாகைகள் ஐர்தையும் சேர்த்துத் தன் தேவியின் பெயரால் திருமலாபுரம் என்று பிராமணர்களுக்குத் தானம் செய்ததைத் தெரிவிப்பதாகும்.

Copper-plate grant relating to Kittane *agrahāra*. Tamil version of a grant dated in S'aka 1437, Yuva, in the reign of the Vijayanagara king **Krishnaraya**, of which only the beginning is available.

The incription published as Hn. 6 in the **Epigraphia Carnatica**, Vol. V. appears to be the original for this.

[கிஷ்ணுரயற் குடுத்தது. சாலிவாகன சகை ௲௪௱௩௰௭ யுவ வருஷத்திலெ குடுத்தது.]

𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌙𑍍𑌗 𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑍁𑌮𑍍𑌬𑌿 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌚𑌾𑌮𑌰𑌚𑌾𑌰𑌵𑍇 ।
𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌨𑌗𑌰𑌾𑌰𑌮𑍍𑌭 𑌮𑍂𑌲𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌾𑌯 𑌶𑌮𑍍𑌭𑌵𑍇 ॥

𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑌦𑍍𑌧𑌾𑌮 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹 𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌪𑌹𑌮𑍍 ।
𑌯𑌦𑍍𑌗𑌜𑍋𑌽𑌪𑍍𑌯𑌗𑌜𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌂 𑌹𑌰𑌿𑌣𑌾𑌪𑌿 𑌚 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇 ॥[1]

ஸ்ரீ அத்திரியினிடத்திலெ சந்திரன்; சந்திரனிடத்திலெ புதன்; புதனிடத்திலெ புரூருவன்; அவனிடத்திலெ ஆயு; ஆயுவினிடத்திலெ நகுஷன்; நகுஷனிடத்திலெ யயாதி; அவனிடத்திலெ தெவயானி; அந்த வமுசத்திலெ வசுதெவன்; அந்த வமுசத்திலெ திம்மருசன்; அந்த திம்மருயன் துளவ ருசாக்கள் ளிலெ வெகு கீர்த்தியாயிருக்குரவன். ...[2]

---

1. விஜயநகர மன்னர்களுடைய சாசனங்களில் சகஜமாகக் காணும் சுலோகங்களில் இதுவும் ஒன்று. திருத்தமான பாடத்துக்கும் மொழிபெயர்ப்புக்கும் பிற்சேர்க்கை பார்க்க. மூல எட்டிலே இந்தப் பகுதி தெலுங்கு எழுத்தில் காணப்படுகிறது.

2. இதனோடு நின்று விடுகிறது. மேலே கிடைக்கவில்லை.

உன்னுவாரம் (ஹோன்னுவரம்) Honnāvara

இது ஹாஸன் ஜில்லாவில் ஹாஸன் தாலூகாவில் உள்ள ஒரு கிராமம். மக்கென்ஸியின் பிரதியிலே, 'ஹாசன ஒபளி குதுரெ குண்டி ஸ்தலத்து உன்னுவாறம்' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதிலே சென்னராய ஸ்வாமி என்று குறிக்கப்படும் கேசவப் பெருமாள் கோவில் முன்னே உள்ள நாட்டுக் கல்லில் காணும் சாசனம்.

சாசனம்—967] [D. 2782-க

ஒரே சாசனமாகப் பிரதி செய்யப்பெற்றிருப்பினும் இரு வேறு சாசனங்கள் அடங்கியது.

முதலாவது எபிகிராபியா கர்நாடிகா, V வால்யூம், ஹாஸன் 65 செ. ஆக வெளியிடப்பட்டுள்ள கன்னட மொழிக் கல் வெட்டின் தமிழ் ஆக்கமேயாகும். இரண்டாவது அதற்கு அடுத்த ஹாஸன் 66 செ. ஆகும்.

On a stone set up to the south-east of the temple of Kēs'ava, known also as Chennarāyasvāmin. Tamil version of two Kannaḍa records written one below the other.

The first one dated in Saka 1071, Vibhava, Māgha, Śu. trayōdas'i, Tuesday, Rōhiṇi, Karkaṭaka *lagna*, in the reign of the Hoysaḷa king **Vishnuvarddhana** registering the construction of a Vishṇu temple for Kēs'ava in the Honnavara *agrahāra* in Nirggunda-naḍu, by [Koṇeya Śaṅkara Daṇḍanātha, a dweller at the lotus-feet of Mahāmaṇḍalēśvara Vīra Gaṅga Vishṇu-varddhana-Poysaḷadēva, the boon-lord of Dvarāpatipura. It contains the eulogies of all the three persons as well as the traditional account of the Hoysaḷa family.

This has been published as Hn. 65 in the **Epigraphia Carnatica**, Vol. V.

The second one written in continuation of the first is a record registering the grant of some lands to the temple of Kēs'ava and to Bokaṇṇa, son of S'aṅkara Daṇḍanāyaka, by [Heggaḍe] Lakshmaṇa, son of Nagadēva Nāyaka of the Kaṇva-vams'a and the Kas'yapa-gōtra, an officer who established the Hoysaḷa king Nārasimhadēva, freeing the kingdom of his enemies.

This has been published as Hn. 66 in the **Epigraphia Carnatica** Vol. V.

[அ]

ஸ்ரீமது மூனுலொகத்துக்கு பூச்சிறுயிருக்குர, சகல கருமத்துக்கும் சாக்ஷியாயிருக்குர, சகல வறத்தையும் பத்தாளுக்கு குடுக்குரதாயிருக்குர, கெசி யெங்குரவனெ (சி)[ச]ங்காறம் பண்ணவறுயிருக்குர, மங்களகறுயிருக்குர ஸ்வாமியை நமஸ்கரிக்கிறென்,

ஸ்ரீசமஸ்தமாயிருக்குர லொகங்களெ ரெக்ஷிக்கிர பகவானுடைய கமலத்திலெ பிறந்த பிறம்[மா*]; அதின் பிறகு அத்திரி; அத்திரியினிடத்திலெ சந்திரன்; சொமனிடத்திலெ புதன்; அவனுக்கு புரொருவன்; அவனிடத்திலெ ஆயு; ஆயுவினிடத்திலெ நகுஷன்; நகுஷனிடத்திலெ யயாதி; யயாதியினிடத்திலெ யது. அந்த வமுசத்திலெ அனேக ருசாக்கள் துவாறகா பட்டணத்திலெ ருச்சியம் ரெக்ஷிச்சுக் கொண்டு யிருந்தார்கள். அவற்களிலெ சாளனென்குர ருசா உண்டாய் அவன் சிம்மாசலத்துக்கு[1] வெகு சந்தொஷத்துடனெ வந்து வெட்டைக்கு ஒரு ளுள் பிறப்பட்டு முன்னெ முசலானது புலியை துறத்துறது கண்டு யிது வீரக்ஷெத்திர மென்னு பா[ர்*]த்து யிருக்கச்செ வெரை ஒரு புலி யிந்த முசல்மேல் பாய வந்ததை ருசாவானவன் பாணத்துனாலெ யிரு துண்டமாய் கொன்னு பொட்டத்தை தபங்க முனீசுவரர் அந்த ரிஷியானவற் பா[ர்*]த்து சந்தொஷப்பட்டு யிவன் புலியை செயம் பண்ணினபடியினாலெ விசயனென்றும் ஹொய்ஸள[2] னென்று பெற வந்துது. அந்த வமுசத்துக்கு ஹொய்ஸள மென்று பெருச்சுது. அந்த யொசளனு[3] வமுசத்திலெ பருக்கிரமத்திலெ ஆதித்தியனெபொல் வெகு வணக்கத்துடனெயும் யிருந்தபடியினாலெ 'விநயாதித்ய' னெ[ன்*]று பெற வந்துது. அப்படி கீறித்தியை அடைஞ்சு யிருக்குர ருசாவுக்கு வல்லாள ருயன்[4] நல்ல குணபந்தயாயிருக்குர ஸ்த்[ரீ*] அவளிடத்திலெ சகல பொக பாக்கியத்தை அடைஞ்சு அவளிடத்திலெ தனக்கு சமானமாயிருக்குர வெகு புத்தி வணக்கத்துடனெயும்...... த்துடனெயும் யிருக்கு புத்திரனெ அடைஞ்சு யிருகுர வன் மகன்[4] விஷ்ணுவற்த்தன ருயன் யொசள[3] தெவன் ருச்சியம் ரெக்ஷிக்கச்செ சகலமான வித்துவாம்சாள் முதலான பெறகளெ ரெக்ஷிக்கிரத்திலெ ஒருத்தரும் உபமானமில்லாமல் யிருக்குரவன்; குருவினிடத்திலே வெகுபத்தியாயிருக்குரவன்; தன்னுடைய ஸ்த்[ரீ*] தவிர பறஸ்த்[ரீ*]களெ கண்ணாலெ பாற்க்குரவனல்ல; தெசங்களிலெயிருக்குர ருசாக்கள் எல்ல[ா*]ரும் பாதாக்கிறாந்தாளாய் விழுகுர பிருது அடைஞ்சவன்; தன்னுடைய ஆக்கினயை தள்ளி யிருக்குரவற்களெ

1. இது 'ஸஹ்யாசலம்' என்று மூலத்தில் காணப்படுகிறது.
2. இது தெலுங்கு லிபியில் எழுதப்பட்டுள்ளது.
3. 'ஹொய்ஸல' என்பதே இவ்விதம் எழுதப்பட்டிருக்கிறது.
4. இது வரிப்பிளவாக எழுதப்பட்டுள்ளது.

சிக்ஷணை பண்ணுகுரவன் ; தலைக்காடுலெ யிருந்து ருச்சிய பரிபாலனம் பண்ணி கொண்டு ருசாதி ருசனென்று கீறித்தியை அடைஞ்சு யிவன் ஆளுகுர தெசம் துளுவ தெசம், சக்கிர கூடம் தளவனபுறம் முச்சங்கி கொளாள நீலாவள துற்க்கம் ருயருயொத்தம புரி தெற்ப்பக்கூர் கொத்தவாடி[1] யிந்த கெடிகள் தன்னுடைய புசபெலத்துனாலே கட்டிக்கொண்டு.

ஸ்வஸ்தி [||*] சமதிகெத பஞ்ச மகா சப்த்த மகா மண்டலெசுபற துவாருவதி பட்டத்துக்கு யீசுவறனாய சசக புறவாச நிவாசமா யிருக்குர வாசந்திகாதெவி வறலப்த்தமா யிருக்குரவன் ; காவெரீ தீரத்துக்கு ருசஹமுசன் ; தலக்காடு, கொங்கு, நங்கலி, கெங்க வாடி, னொணம்பவாடி, பனவசை, ஆனைகல்லு முதலானதும் கட்டிக்கொண்டு புசபெல வீரனாயிருக்குர கெங்கா விஷ்ணு வற்த்தன யொசள[2] தெவன் கிழக்கு நங்க வள்ளி கட்ட தெற்க்கு கொங்கு மெற்க்கு பாற்க்கூர் வடக்கு சாதி மலை[3] யிதுக்குள்ளெ யிருக்குர பூமியை ரெக்ஷிச்சுக் கொண்டு யிருக்குர விஷ்ணுவற்த்தனருயன் மலையாளம் குடகு முதலான பாளையகாறரை ரெக்ஷிச்சு கீரித்தியை அடைஞ்சு கெறள தெசத்தை செயிச்சு அவற்களை அவமானம் பண்ணி அலகூர் காந்தாபுறத்திலெ பரிக்கிறக்களும்[4] வீடுகளும் கட்டி வைச்சு அதுக்கு மெல் நிற்க்குந்த னாடுலெ ஹொன்னுவாற மெங்குர அக்கிராகறத்துலெ சகை வருஷம் ௲௭௰௧ விபவ வருஷம் மாக சுத்த திறயொதெசி மங்கள வாரம் ரொகிணீ நக்ஷத்திரம் கடக லெக்கினம் ஸ்ரீ கெசவ பிறதிஷ்டையும் பண்ணி[னார்||*]

[ஆ]

சமஸ்த சீல குண சம்பன்னனாய காணுவமுசம்[5] னாக தெவனாயகனுக்கு பிறயத்னாயிருக்குரவன் காச்சிய கொத்திரத்துக்கு

---

1. ‘ துளுவ தெசம், சக்கரக் கொட்டம், தளவன புரம், உச்சங்கி, கொளாலம், நீலாசல துர்க்கம், ராயராயொத்தமபுரி, தெரெயூர், கொயத்தூர், கொந்தவாடி ’ என்று வாசிக்க.

2. ‘ ஹொய்ஸள ’ என்பதே இவ்விதம் எழுதப்பட்டிருக்கிறது.

3. ‘ சாவிமலை ’ என வாசிக்க.

4. ‘ ஹரி கிருகங்களும் ’ அதாவது, விஷ்ணு ஆலயங்களும் என்று கொள்க.

5. ‘ காண்வ வம்சம் ’ என்று வாசிக்க.

பரிசுத்தனுயிருக்குர புருஷொத்தமாருதன பிறசாத மகதைசு
வரிய அசகாய [செ*]சளரியமும் உதாறவீரியமும் ஸ்ரீமன் மகா
பிறதானனுயிருக்குர, ஹொய்ஸள நரஸிம்ஹ தெவரிகெ[1] ஹொய்
சளநறசிம்மதெவனுக்குருச்சிய நிஷ்கறணனே பண்ணி பட்டாபி
ஷெகம் பண்ணிக் கொண்டு பிறசித்தனுய லக்ஷுமணன் தாரு
ஒட்டச்சு, ஒட்டுக்காசு : ஒட்டியர்கள் இடையிலே சிறிது காலம் நாட்டைக் கைப்பற்றி ஆதிக்கம் செலுத்திய நாளிலே அவர்களுக்கு இறுத்த தண்டப் பணம். அவர்கள் ஆதிக்கம் நீங்கிய பின் அவர்கள் இழைத்த தீங்கை நிவர்த்திப்பதற்காக வசூலிக்கப்பட்டதையும் குறிக்கும்.

ஒரு பூ : ஒரு போகம் ; நிலத்தில் ஒரு தடவை விளைவது.

கடைக்கூட்டிலக்கை : முன்னாளில் வழங்கிய வரிகளுள் ஒன்று ; பொருள் சரியாக விளங்கவில்லை.

ஓலை : அரசன், அவனுடைய அதிகாரிகள் ஆகியோர் அனுப்பும் உத்தரவு.

ஓலைச்சம்படம், ஓலைச்சம்பளம் : கிராமத்துக்கு அதிகாரிகளின் ஓலையை எடுத்து வருபவனுக்குக் கொடுக்கும் சம்பளப் பணம்.

கடைப் பூ : கடைசிப் போகம் ; நிலத்தில் கடைசியாக விளைவது.

கண்ணடி : முகம் பார்க்கும் கண்ணடியைத் தயாரித்து விற்பனை செய்பவர்கள் இறுக்கும் வரி, கட்டணம்.

கடமை : அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிகளைப் பொதுவாகக் குறிக்கும் சொல்.

கர்ப்பூர விலை : தேவஸ்தான நிலங்களைப் பயிரிட்டு அனுபவிப்பதற்காக, அதன் மீதுள்ள வரியையும் சேர்த்து மொத்தமாகக் கொடுக்கும் விலைப்பணம்.

கழஞ்சு : முன்னாளில் வழங்கி வந்த பொன் நாணயம். அதன் எடையையும் குறிக்கும்.

காசுக் கடமை : தானிய வகையாக அல்லாமல் காசாக இறுக்க வேண்டிய வரிகளைப் பொதுவாகக் குறிப்பது.

காடு காவல் : காடுகளைப் பராமரிப்பதற்காக இறுக்கும் வரி. [காடு என்பது சுடுகாட்டையும் குறிக்கும்.]

காணிக்கை : தெய்வத்துக்கோ, பெரியவர்களுக்கோ சமர்ப்பிக்கும் பொருள். சாசனங்களிலே இச் சொல் அரசனுக்கும் அதிகாரிகளுக்கும் அவ்வப்போது காணிக்கை செலுத்துவதற்காக இறுக்கும் வரியைக் குறிக்கும்.

காணம் : கட்டணம் ; செலுத்தவேண்டியதைக் குறித்த காலத்தில் செலுத்தாமல், காலம் கடந்து செலுத்துவதற்குத் தண்டமாக அதிகம் சேர்த்துக் கொடுப்பதைக் குறிக்கும்.

காணி : அனுபவிக்கும் உரிமை.

காணியாட்சி : பரம்பரையாக அனுபவிக்கும் உரிமை.

கார் : மழைக்காலத்தில் விளைக்கும் முக்கியமான நெற்பயிர். பெரும்பாலும் ஐப்பசி மாதத்தில் அறுவடை யாவது. அவ்விதம் விளையும் நெல் வகை ஒன்றுக்கும் பெயர்.

கார்த்திகைப் பச்சை : கார்த்திகை மாதத்திலே அறுவடைக் காலத்தில் கிராம ஊழியர்களுக்குப் பண்டிகை, பருவங்களுக்கெனத் தானியம் போன்ற வகைகளில் கொடுக்கும் இனம் போலும். ஆடிப் பச்சை என்பதையும் பார்க்க.

காராண் கிழமை, காராண்மை : பரம்பரையாக நிலத்தை உழுது பயிரிட்டு அனுபவிக்கும் உரிமை.

காரியப்பேறு : 'காரிய ஆராய்ச்சி' என்பதும் இதுவே போலும். ஸ்ரீ காரியப் பேறு என்றும் வழங்கப்பெறும்.

காலிங்கராயன் பணம் : கொங்கு நாட்டிலே காலிங்கராயன் அதிகாரம் செலுத்திவந்த நாளிலே அவன் செய்த மராமத்துக்களுக்காகக் குடிமக்கள் இறுத்த வரி.

கீற்று வரி : கீற்றுவேய்ந்த குடிசைகளுக்கு இறுக்கும் வரி.

குடி நீங்காத் தேவதானம் : ஏற்கெனவே மக்கள் குடியேறியுள்ள ஒரு கிராமத்தைக் கோவிலுக்குத் தானம் அளிக்கும்போது, அவ்விடம் உள்ள குடிகளையும் அவர்களுடைய உரிமைகளையும் நீக்காமல், மேல் வார்த்தையோ வரிகளையோ மட்டுமே கோவில் அடையும்படி அளிக்கும் கிராமம்.

குடிமை : நிலவரி தவிர, அரசாங்கத்துக்கு இறுக்கும் மற்ற வரிகளைப் பொதுவாகக் குறிக்கும் சொல். [நாட்டின் குடியாக வாழ்வதற்கு இறுக்கும் வரிப்பணம்]. குடிப்பணம் என்று வழங்கப்படுவதும் இதையே குறிக்கும்போலும்.

குதிரைப் பந்தி: குதிரைகளைக் கட்டும் லாயம். அதற்காக வசூலிக்கப்படும் சிறுவரியையும் குறிக்கும்.

குளவடை: ஏரி வரி; ஏரி குளங்களிலிருந்து, மீன் பிடிப்பது போன்ற வகைகளில் கிடைக்கும் வருமானம்.

கூட்டிலக்கை: கிராமப் பாதுகாவலுக்காகக் கொடுக்கப்பெறும் சிறு வரி; கூட்டாகக் குடியிருப்பதற்கான வரியையும் குறிக்கும். கூத்திலக்கை என்றும் எழுதப்படுவது உண்டு.

கூற்றரிசி: குத்திய அரிசி; அவ்விதம் அரிசி குத்துவோர்களுக்காகக் கொடுக்க வேண்டிய வரிபோலும். [அந் நாளிலே கோவில்களுக்கு நெல் கூற்றும் சாலை தனியாக இருந்ததென்று சில இடங்களில் காணப்படுகிறது.]

கைக்கோளர்: தோள்வலி மிகுந்த காலாட்படையினர்.

[கோவிலில் ஊழியம் செய்பவர்களுள்ளும் கைக்கோளர் பெயர் காணப்படுகிறது. அந் நாளிலே கோவில்களும் படைவீரர்களைக் கொண்டிருந்ததென்று தெரிகிறது.]

சண்டேசுரப் பெருவிலை: சிவன் கோவில் நிலங்களைப் பிறருக்கு விற்கும்போது கொடுக்கப்படும் நில விலை. சிவன் கோவிலைச் சண்டேசுரப் பெருமானே நிர்வகிப்பதாக ஐதிகம். கோவில் கணக்குகள் அவர் பெயரிலேயே நடைபெறுவது வழக்கம்.

சதுர்வேதி மங்கலம்: (நாலு) வேதம் தெரிந்த பிராமணர்களின் குடியிருப்பான கிராமம். பெரும்பாலும் அது அந்தப் பிராமணர்களுக்கு வரியல்லாமல் வழங்கப்பெற்றிருக்கும்.

சந்தி: காலையிலோ, மாலையிலோ, குறிப்பிட்ட வேளையில் கோவிலில் மூர்த்திக்கு நடத்தும் பூசை.

சந்தியாதீபம்: கோவிலிலே பகலும் இரவும் கூடும் வேளையில் ஏற்றும் விளக்கு. பெரும்பாலும் மாலையிலேதான் ஏற்றப்படுவது. சிற்சில சமயங்களில் காலையிலும் போடப்படும்.

சந்திராதித்தவத், சந்திராதித்தவல், சந்திராதித்தவற்: சந்திர சூரியர் உள்ளளவரையில்.

சந்தி விக்கிரகப் பேறு: கிராமத்தின் மத்யஸ்தனுக்குக் கொடுக்கும் கட்டணம். பத்திரம் எழுதுபவர்களுக்குக் கொடுக்கும் கட்டணத்தையும் குறிக்கும்.

சபா வினியோகம்; சபையினால் இறை நீக்கப்பெற்ற நிலங்களின் வரிப்பணத்தை ஊரார் ஏற்றுக் கொடுப்பதிலே வரும் பங்கு.

சபை : அகரம், பிரம்மதேயம், சதுர்வேதிமங்கலம் என்னும் பிரா ம்ணர் குடியிருப்புக் கிராமங்களுக்கு அமைந்த சபை. 'குறி' என்றும் குறிக்கப்பெறுவது உண்டு.

சமுதாயப்பிராப்தி : குடிகள் பொதுவாக அனுபவிக்கும் நிலங் களிலிருந்து கிடைக்கும் வருவாய்; அதே போல ஊர்ப் பொதுவுக்கா கச் செய்யும் செலவு; இவற்றில் அவர் அவருக்கு வரும் பங்கு.

சருகூடை : சருகு கூடை என்பதே இப்படி ஆயிற்றுப்போலும். அவ்விதமானால் கிராமப் பொதுவான புறம்போக்கு நிலங்களிலிருந்து உலர்ந்த சருகுகளை அரிக்கும் உரிமையைக் குறிக்கும்.

சலாகை : முன்னாளிலே வழங்கிவந்த நாணய வகை.

சாத்துப்படி : கோவில் விக்கிரகங்களுக்குச் செய்யும் அலங்காரம்.

சாவா மூவாப் பேராடு : இறத்தலும் மூப்பும் இல்லாமல் நிரந்தர மாக நிலைத்திருக்கும் ஆடு. [கோவில்களுக்கு அளிக்கும் ஆடுகளையே இவ்விதம் குறிப்பர் சாவினாலும் மூப்பினாலும் அவ்விதம் அளித்த ஆடு களின் தொகை குறையும்போது, தாய் ஆடுகளின் குட்டிகளைக் கொண்டு நிரப்பித் தொகையைப் பூர்த்தி செய்து, கோயிலுக்குச் செலுத்தவேண் டிய நெய் போன்றவற்றை முட்டாமல் செலுத்த வேண்டும்.]

சாலா போகம் : அன்னசாலைக்காக வரியில்லாமல் விடப்பட்ட நிலம். அறச்சாலா போகம் என்றும் குறிக்கப்படும்.

சித்தாயம் : சிற்றாயமே இவ்விதம் குறிக்கப்படுவது போலும். விஜயநகர மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் இது பொன்னாக இறுத்து வந்த சிறு வரிகளைக் குறித்து வந்தது.

சில்லாயம், சிற்றாயம் : சிறுவரிகள் ; சில்லிறை.

சிவிகைப்புறம் : கோவிலில் பல்லக்கு ஸேவைக்கான செலவுக்கு விடப்பட்ட நிலம்.

சிறுபாடிகாவல் : கிராமப் பாதுகாவலுக்காக நியமிக்கப்பட்ட ஊழியர்களின் சம்பளத்துக்காக இறுக்கும் பணம்.

சுங்கம் : வெளியிலிருந்து 'கலத்தினுங் காலினும் வரும் பண்டங் கட்கு' இறை.

சூலக்கல் : சிவன் கோவில் நிலத்தின் எல்லையைக் குறிப்பதற் காகச் சூல உருவம் பொறிக்கப்பெற்று நட்டிருக்கும் கல்.

சூலத்தாபனம் : சிவன் கோவில் நிலத்து எல்லையைக் குறிப்பதற் காகச் சூல உருவம் பொறித்த கல்லை நடுவது,

சூலவரி, திருசூலவரி : சிவன் கோவிலுக்காகச் சூலம் சூடுபோட்டு, விட்ட கோவில் மாடுகளின் பராமரிப்புக்காக வசூலிக்கப்பெறும் வரி.

சூளைத்திறை : கடைகளுக்கு இறுக்கும் வரி; முக்கியமாகப் படை வீடுகளில் உள்ளனவும் படையெழுச்சியின் காலத்தில் படையுடன் செல்லும் கடைகளும் ஆகியவற்றையே குறிக்கும். சூளை என்னும் சொல் பரத்தையரையும் குறிக்கும். ஆகவே பரத்தையர் செலுத்திய வரியும் ஆகும். கன்னடக் கல்வெட்டுக்களிலே இந்தப் பொருளில்தான் இது வழங்கப்பெற்றுள்ளது.

சேக்கிறை : செக்குக்காக கொடுக்கவேண்டிய சிறுவரி.

செட்டிறை, செட்டி யிறை : வியாபாரிகள் இறுக்கும் வரி.

சேவகத்தேவை : அரசனும் அதிகாரிகளும் ஊருக்கு விஜயம் செய்யும் காலத்தில் அவர்களுக்குச் சேவகம் செய்வதற்காக ஆட்களை நியமிப்பது; அவர்களுக்கு உரிய கூலிக்கான வரிப்பணமும் ஆகும்.

சோடி : கோயில்களுக்கு உள்ள நிலங்களில், இறை நிலங்களைத் தவிர்த்து மற்றவைகளுக்காக மிகக் குறைந்த விகிதத்தில் இறுக்கும் வரி. ஜோடி என்பதும் அதுவே.

தட்டார்பாட்டம், தட்டாரப் பாட்டம் : தட்டார் இறுக்கும் இறை.

தட்டோலி : சாசனங்களிலே இந்தச் சொல் 'தட்டாரப் பாட்டம்' என்பதனோடு சேர்ந்தே காணப்படுகிறது. கம்மாளரிலே வேறு வகையாரான கொல்லர் போன்றவர்கள் இறுக்கும் வரியையே இது குறிக்கும் போலும்.

தண்ட(ங்) குற்றம் : தண்டம், குற்றம் ஆகிய இரு சொற்களும் சேர்ந்து ஆகிய இத் தொடர் ஒன்றுகவே சாசனங்களில் காணப்படுகிறது. சில சமயங்களில் மன்றுபாடு என்பதனோடு சேர்ந்தும் வரும். இழைத்த குற்றத்துக்காகச் செலுத்தும் அபராதத் தொகையே குற்றம் எனப்படும். இதர வகையான அபராதத் தொகை தண்டம் என்னும் பெயரின்பாற் படும்.

தண்ணீர்க்காணம் : நீர்கூலி; நீர்ப்பாசனத்துக்காக இறுக்கும் வரி.

தர்ம தானம் : தர்மத்தை நடத்துவதற்காக இறையிலியாக அளிக்கப்பட்ட நிலம்.

தறிக்கடமை, தறியிறை : நெசவுத்தறிக்கு இடும் வரி.

தனியூர் : பிறருடைய கண்காணிப்பு இல்லாமல் நிர்வாகம் முழுவதையும் ஊரில் உள்ளவர்களே நடத்திச் செல்லும் உரிமைபெற்ற ஊர். பெரும்பாலும் சதுர்வேதி மங்கலங்களாகவே இருக்கும்.

திருக்காமக் கோட்டம்: சிவாலயத்தின் உறுப்பாகத் தேவிக்குத் தனியாக எழுப்பப்பெறும் கோயில். அம்மன் கோயில்.

திருக்காவணம்: கோவில் நந்தவனம்; கோவில் மண்டபத்தின் அலங்காரமான மேற்றளத்தையும் குறிக்கும்.

திருக்கைக் கோட்டி: திருமுறை ஓதுவதற்கு உரிய கோயில் மண்டபம். திருக்கையோட்டி என்றும் சாசனங்களில் காணப்படும்.

திருச்சுற்றாலை, திருச்சுற்றுமாளிகை: கோயில் பிராகாரங்களும் அவைகளைச் சுற்றி எழுப்பிய திருமதில்களும்.

திருத்தொங்கல்: பூமாலை. பெரும்பாலும் பருத்துள்ளது.

திருநாமத்துக் காணி: சிவன் கோவிலுக்குச் சொந்தமான நிலம். 'தேவதானம்' என்னும் தலைப்பிலும் பார்க்க.

திருப்படிமாற்று: கோவிலில் தினசரி பூசை நிவேதனத்துக்கான படித்தரக் கட்டளை.

திருப்பள்ளித் தாமம்: கோவிலில் மூர்த்திகளுக்குச் சாத்தப்படும் மாலை.

திருப்பாவாடை: ஆடைவிரித்து அதன்மீது கோவில் மூர்த்திக்குப் படைக்கும் பெரிய நிவேதனம்.

திருமடைப்பள்ளி வரி: கோவிலின் மடைப்பள்ளிக்காக இறுக்கும் வரி.

திருமாளிகை: திருமாளிகைப்பத்தி என்பதன் சுருக்கம். கோவில் பிராகாரம்.

திருமுகம்: அரசன் உத்தரவு எழுதிய ஓலை.

திருவாய்க் கேழ்வி: அரசன் வாயால் சொல்லும் உத்தரவைக் கேட்டு உரிய இடங்களுக்கு அனுப்பும் பொறுப்பு வாய்ந்த அதிகாரி.

திருவிடையாட்டம்: விஷ்ணு ஆலயத்துக்குச் சொந்தமான நிலம். 'தேவதானம்' என்னும் தலைப்பிலும் பார்க்க.

திருவிளக்குக் குடி: கோவில் விளக்குக் கட்டளையை நடத்துவதற்காக மானிய நிலம் பெற்றுள்ளவர்.

திருவிளக்குடையார்: கோவிலில் விளக்கு ஏற்றுவோர்.

தீட்டு: எழுத்து மூலமாக உள்ள ஆதாரம்.

துலாபார வரி: அரசன் துலாபாரம் ஏறித் தானம் செய்வதற்காகக் குடி மக்கள் செலுத்தும் வரி.

தேவகன்மிகள், தேவர்கன்மிகள் : கோவில் காரியங்களை நிர்வகித்து வருபவர்கள்.

தேவதானம் : கோயில்களுக்குத் தானமாக அளிக்கப்பட்டுக் கோவில்களுக்கே சொந்தமாக உள்ள நிலம், கிராமம். பெரும்பாலும் கோவில் செலுத்த வேண்டிய வரி ஏதும் இல்லாமல் இருக்கும். இவ்விதம் உள்ளவைகளுள் சிவன் கோவில்களுக்குச் சொந்தமானது திருநாமத்துக்காணி என்றும் விஷ்ணு கோயிலுக்குச் சொந்தமானது திருவிடையாட்டம் என்றும் பெயர் பெறும்.

நகரம் : வணிகர்கள் வாழும் ஊர்; அந்த ஊரின் சபையையும் குறிக்கும்.

நத்தவரி : கிராம நத்தத்திலே வீடு கட்டிக் குடியிருக்கும் நிலத்துக்காக இறுக்கும் வரி. மனைவரி என்பது அதுவே.

நல்லெருது : எடுத்துக் காட்டாக விளங்கக்கூடிய எருதைப் பரிபாலிப்பதற்காக ஏற்பட்ட வரி. 'காட்சி எருதுக்காசு' என்றும் குறிக்கப்படும்.

நற்பசு : எடுத்துக் காட்டாக விளங்கக்கூடிய நல்ல பசுவைப் பராமரித்து வைத்திருப்பதற்காகச் செலுத்தும் கட்டணம்.

நாட்டவர், நாட்டார் : பல கிராமங்கள் கொண்ட பகுதியான 'நாடு' என்பதற்குத் தனியாக அமைந்த சபை. அந்தச் சபையில் உறுப்பினர்களாக உள்ளவர்களையும் குறிக்கும்.

நாட்டார் பட்டி : நாடு என்னும் சபையார் விதித்து, அவர்களுக்கு இறுக்கும் வரி.

நாட்டுவினியோகம் : நாட்டவரால் இறை நீக்கப்பெற்ற நிலங்களின் வரிப்பணத்தை அவர்களே ஏற்றுக் கொடுப்பதில் வரும் பங்கு.

நாடு : பல கிராமங்கள் கொண்ட ஒரு பகுதி. அதற்கு அமைந்த சபையையும் குறிக்கும்.

நாடு காவல் : நாட்டின் காவலுக்குச் செய்யும் ஏற்பாட்டின் செலவைச் சரிக்கட்ட இறுக்கும் வரி.

நிமந்தம், நிவந்தம் : கோவிற் செலவுத் திட்டம்.

நிலவரி : இறையிலி அல்லாத இதர நிலங்களின் மீது விதிக்கப்பெறும் நிலவரி. நிலவழி என்றும் குறிக்கப்பெறும்.

நீரோணி : நீர்க்கூலி.

நந்தா விளக்கு: கோவிலில் எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் வாடா விளக்கு. நொந்தா விளக்கு என்றும் குறிக்கப்பெறும்.

நெய்: நெய் வியாபாரத்தின் மீது இடப்பட்ட வரி.

நெல் முதல்: வரியாக இறுக்கப் பெறும் நெல்.

நெல்லாயம்: பணமாக இல்லாமல் விளைந்த நெல்லாகவே கொடுக்க வேண்டிய வரி. நெற் கடமை என்றும் குறிக்கப்பெறும்.

பச்சை: கிராமத் தொழிலாளிகளுக்குச் சில விசேஷ காலங்களில் இனமாக, பெரும்பாலும் தானியமாகவே கொடுக்கப்பெறுவது.

பசானம், பிசானம்: மழை இல்லாத காளில் பாசனம் மூலம் பயிரிட்டு விளைவிப்பது. பெரும்பாலும் சித்திரை மாதத்தில் அறுவடையாவது. அவ்விதம் விளையும் நெல் வகை ஒன்றுக்கும் பெயர்.

பஞ்சுப் பீலி, பஞ்சு பீலி: பஞ்சு சம்பந்தமான வரி.

பட்டரை, பட்டறை: கேணிப் பாசனம் உள்ள நன்செய் நிலம். அவ்விதம் பயிர் செய்வதற்கு இறுக்கும் நீர்க் கூலியையும் குறிக்கும். பட்டிறை என்பதே இவ்விதம் தவறாக எழுதப்பட்டிருத்தலும் கூடும்.

பட்டிறை: பட்டுநூல், அதன் நெசவு முதலியவற்றின்மீது விதிக்கப்பட்ட வரி.

பண்டாரம்: பொருள் சேர்த்து வைக்கும் இடம்; கஜானா.

பதிபால மூலத்தார்: சிவன் கோவில் நிர்வாகத்தை நடத்துவதற்காக ஏற்பட்ட முக்கியமான சபை.

பலிசை: வட்டி.

பாடி காவல்: 'ஊர்க்காவல்' ஆகும்.

பார்பத்தியம்: நிர்வாகம்.

பிடிபாடு: உத்தரவு தாங்கிய ஓலை.

பிரம்மதேயம்: பிராமணர் குடியிருப்புக்காக அவர்களுக்கு மானியமாக அளிக்கப்பட்ட கிராமம். அகரப் பிரம்ம தேயம் என்றும் வழங்கப் பெறும்.

புரவு: நிலவரி. [சாசனங்களிலே இச் சொல் 'இறை புரவு' என்று சேர்ந்தே வழங்கப்படும். புறநானூற்றுப் பழைய உரையாசிரியர் (செய்யுள் 75) இறை என்றே இதை விளக்குகிறார். பயிரிடும் நிலத்தின்மீது வரியாக அரசாங்கத்துக்குப் போய்ச் சேர்வது இறை என்றும் மற்றவை புரவு என்றும் குறிப்பதாகக் கொள்ளலாம்.]

புல்வரி: ஊரில் உள்ள மேய்ச்சல் நிலங்களுக்காகப் பொதுவில் இறுக்கும் வரிப் பகுதி.

புறம்படி: வெளிப்பகுதி.

புன் பயிர்: எள், வரகு, கம்பு, சாமை போன்ற புன்செய்ப் பயிர்.

புன் பயிர்க் கடமை: புன்செய் நிலத்தில் விளையும் பயிருக்காக இறுக்கும் கடமை.

பொருட்சேல வோலை: பணம் கொடுத்ததற்குப் பெறும் ரசீது.

போலியூட்டு: பணத்தை வட்டிக்கு விடுதல்; கோவிலில் ஒரு தர்மத்தை நடத்துவதற்காகப் பெறும் பணத்தை வட்டிக்கு விட்டு அதனால் கிடைக்கும் வரும்படியைக் கொண்டு அந்தத் தர்மத்தை நடத்துவது.

பொன் வரி: தானியமாக அல்லாமல் காசாக இறுக்கும் வரி; [பூமியிலிருந்து தோண்டியோ ஆற்றில் படியும் வண்டல் மணலைச் சலித்தோ பொன் எடுப்பதற்காகச் செலுத்தும் வரியைக் குறிப்பதாகவும் இருக்கலாம்.]

மகமை: கோவில், சத்திரம் முதலிய பொது தர்ம ஸ்தாபனங்களின் செலவுகளுக்காக வசூலிக்கும் வரி; வியாபாரத்துக்கு வரும் சரக்குகளின் அளவு, விலை ஆகியவற்றுக்கு ஒரு விகிதாசாரம் வைத்து வியாபாரிகள் தாமாகவே கொடுக்கும் பணம்.

மகாசபை: பிரம்ம தேயம், சதுர்வேதி மங்கலம் போன்ற ஊர்களில் சபையைத் தேர்ந்தெடுப்பதற்கு உரிமை பெற்ற அனைவரும் கூடிய சபை. மஹாஜனங்கள், பெருங்குறி என்றும் குறிக்கப் பெறும்.

மடைப்பள்ளி: கோவிலிலே நிவேதனத்துக்காகச் சமையல் செய்யும் இடம்.

மடப்புறம்: மடங்களின் செலவுக்காக விடப்பட்ட நிலம்.

மடவளாகம்: கோவிலைச் சுற்றியுள்ள பகுதியில் கோவில் ஊழியம் புரிபவர்களுக்கான குடியிருப்பு.

மண்டல முதல்மைப்பேறு: முன்னாளில் வழங்கி வந்த ஒரு வரி வகை; விவரம் விளங்கவில்லை.

மரவடை, மரவிடை: பயன் தரும் மரம்; அதற்குச் செலுத்த வேண்டிய வரியையும் குறிக்கும்.

மரியாதி: அளவு.

மறு: மறுபோகம். இரண்டாவது தடவை நிலத்தில் பயிர் செய்வது. மறுபூ என்றும் குறிக்கப்பெறும்.

மன்றுபாடு: நீதிமன்றத்தால் விதிக்கப்பெற்று அதற்குச் செலுத்த வேண்டிய அபராதத் தொகை.

மாகேச்வரர்: சிவனடியார்.

மாகேச்வரக் கண்காணி செய்வார்: சிவன் கோவில் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள சிவனடியார்; சிவனடியார் திருக்கூட்டத் தலைவர்.

மாவடை: நிலத்தில் அடங்கிய விலங்குகள்; கிராமத்தில் கால் நடை அடையும் இடம்.

மாவிந்தக் கடமை: அரசனுக்கு இறுக்கும் கடமை. அரசுப் பேறு என்பதையே குறிக்கும் போலும்.

மீயாட்சி: மேல் வாரம். பல சமயங்களில் இது காராண்மை என்னும் சொல்லோடு சேர்ந்து வரும். காராண்மை என்பது நிலத்தைப் பயிர் செய்து அதன் விளைவை அனுபவிக்கும் உரிமை. இப்போது உள்ள வழக்குப்படி குடிவாரம் என்பதாகும். [மீ-மேல்.] ஆகவே இது மேல்வாரம் என்பதாகும்.

மீன்பாட்டம்: மச்ச மாசூல்; ஏரி, குளங்களில் உள்ள மீன்களைப் பிடிப்பவர்கள் இறுக்கும் வரிப்பணம்.

முகம் பார்வை: கண்ணுடி என்பதைப் பார்க்க.

முதல் எழுத்து: முன்னுளில் வழங்கி வந்த ஒரு வரி வகை. ஆனல் விவரம் விளங்கவில்லை.

முதுகண்: வயது முதிர்ந்தவர்களின் மேற்பார்வை; அவ்விதம் மேற்பார்வை இடுபவர்களையும் குறிக்கும். 'கார்டியன்'.

முற்றூட்டு: எந்தவிதமான வரியும் இல்லாதது; சர்வ மானியம். பூர்ண அனுபவம் உள்ள நிலம்.

மூலபரிஷத், மூலபருடையார்: கோயில் நிர்வாகத்துக்குப் பொறுப்பு வாய்ந்த பெரிய சபை.

மெய்க் கீர்த்தி: சாசனங்களின் ஆரம்பத்தில் அரசன் புகழை எடுத்துக் கூறுவதாகச் சேர்க்கப்பட்டிருக்கும் செய்யுள் பகுதி; பிரசஸ்தி என்றும் குறிக்கப் பெறும்.

மெழுக்குப்புறம்: கோவில் மூர்த்திக்குப் புழுகுச் சட்டம் பூசுவதற்கான செலவைச் சரிக்கட்டுவதற்கு விடப்பெற்ற நிலம்.

வண்ணார்பாறை, வண்ணாரப்பாறை: துணி வெளுப்பவர் செலுத்தும் தொழில்வரி. இது பாறைக்காணம் என்றும் கல்லாயம் என்றும் வழங்கப்பெறுவதுண்டு.

வராகன் புள்ளி குளிகை: முன்னாளில் வழங்கிய ஒரு நாணயம்.

வருஷ காணிக்கை: ஆண்டு தோறும் [அரசனுக்கு] செலுத்த வேண்டிய காணிக்கை.

வலங்கை: வலங்கைச் சாதிகள்.

வாசல் காணிக்கை: அரண்மனைக்கு வருஷந்தோறும் இறுக்கும் காணிக்கை. [வாசல்—அரண்மனை வாசல்].

வாசல் வினியோகம்: அரண்மனையாராலும் அதிகாரிகளாலும் இறை நீக்கப் பெற்ற நிலங்களின் வரிப்பணத்தை ஏற்றுக் கொடுப்பதில் வரும் பங்கு.

வாமன முத்திரை: விஷ்ணு ஆலயங்களின் நிலத்து எல்லையைக் குறிப்பதற்காக நடும் எல்லைக் கல்லில் பொறிக்கப்பட்டுள்ள சங்கு சக்கரங்களின் அடையாளம்.

வாலமஞ்சாடி: பழைய வரிகளுள் ஒன்று. எதைக் குறிப்பதென்பது விளங்கவில்லை.

வான் பயிர்: வான் பொழிந்த மழையைக் கொண்டு விளைவிக்கும் பயிர்.

வினியோகம்: இறை நீக்கப்பெற்ற நிலங்களின் வரிப்பணத்தை ஏற்றுக் கொடுப்பதில் வரும் பங்கு. [பலவகையான வினியோகங்களையும் பொதுவாகக் குறிக்கும் சொல்.]

வீரசம்பன் குளிகை: முன்னாளில் வழங்கி வந்த ஒரு நாணயம். 14-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்டுவந்த வீரசம்பன் காலத்தில் முதலாக அச்சிடப் பெற்றது.

வீரராயன் புள்ளி குளிகை: முன்னாளில் வழங்கிவந்த நாணய வகை.

வேச்சமுது: சமைத்த சோறு. (கோவிலில் நிவேதனத்துக்காகத் தயாரிப்பது.)

வேஞ்சனம்: சமைத்த கறி, குழம்பு முதலியவை.

வெட்டி நிலை: வாய்க்கால் வெட்டு முதலியவை போன்ற கிராமப் பொது வேலைகளைக் கூலி பெறாமல் செய்வது. வெட்டியாள், வெட்டிபாட்டம் என்றும் குறிக்கப்பெறும்.

வேளம் : அரண்மனை ஊழியம் ; அரண்மனைச் சிப்பந்திகள் ; அவர்கள் வாழும்பகுதி.

வேளைக்காரர் : எந்தச் சமயத்திலும் அரசனையும் அரசையும் பாதுகாக்கத் தயாராக நிற்கும் படைப் பகுதியினர். அரசர்க்கு வேளைப்படி உரிய பணியைத் தாம் செய்ய இயலாதபோது தம் உயிரை மாய்த்துக் கொள்வதாக விரதம் பூண்ட பணியாளர்.

வேண்டுகோள் : அரசாங்கத்துக்கோ நியாயஸ்தலத்துக்கோ மனு எழுதி அனுப்பும்போது செலுத்தவேண்டிய கட்டணம்.

ஜீவிதப் பற்று, ஜீவிதம் : அதிகாரிகளாக உள்ளவர்களுக்கு அவர்கள் ஆயுட்காலம் வரையில் அனுபவிக்குமாறு அளிக்கப் பெற்ற நிலப் பகுதி. பெரும்பாலும் அது வரி வசூலிக்கும் பாத்தியதை, அதாவது மேல்வார பாத்தியதை மட்டுமே கொண்டதாக இருக்கும்.

ஸ்ரீபண்டாரம் : கோயிலின் கருவூலம் ; கஜானா.

ஸ்ரீயக்கி பழஞ்சலாகை : முன்னாளில் கொங்கு நாட்டில் வழங்கி வந்த ஒரு நாணயம்.

பிற்சேர்க்கை III.

——o——

சொற்றொடர்கள்

சாசனங்களிலே அரிய சொற்கள் ஆளப் பட்டுள்ளதைப் போலவே சொற்றொடர்களும் பயிலப் பட்டுள்ளன. அவைகளின் வரலாறே தனி ஆராய்ச்சியாக அமைந்துவிடும். அவ்விதம் வரும் சொற்றொடர்களில் சிலவற்றைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

கோத் தோட் டுண்ணப் பாலது எல்லாம்: அரசனுக்கும் அரசாங்கத்துக்கும் இறுக்கவேண்டியவை எல்லாம்.

கற்றுப்புல் போகா முற்றூட்டு: கன்றுக்குப் புல் வழங்கும் உரிமையும் போகாமல் உட்பட்ட சர்வ மானியம். [குழந்தைக்குப் பாலும் கன்றுக்கு புல்லும் இனமாகப் பெறும் உரிமை அந்நாளில் இருந்து வந்தது.]

நந்தமற எப்பேர்ப்பட்டாரும் பாற்படுத்திக் காக்க: அழிவு, குறை நேராமல் நன்றாகப் பாதுகாக்க வேண்டும்.

வெண்கலமெடுத்து மண்கலமுடைத்து: வரி வசூல் செய்வதற்கு எடுத்துக் கொள்ளும் கடுமையான முறை. விலையாகக்கூடிய பொருளைக் கைப்பற்றியும் விலையாக முடியாத மண்பாண்டம் முதலியவற்றை அவனுக்கும் உபயோகமாக முடியாதபடி உடைத்தும் துன்புறுத்துவது.

'வயிராவி செத்தும்' என்ற தொடரும் சில சமயங்களில் இதனோடு சேர்ந்து காணப்படுவது உண்டு. கோவில்களுக்கு அளிக்கப் பெற்றுள்ள சாசனங்களிலேதான் அவ்விதம் காணப்படும். தன் உயிரைக் கொடுத்தும் கோயில் சொத்தைக் காப்பவன் வைராவி. அவ்வகையார் வீரமுஷ்டி என்றும் வீரபத்திரர் என்றும் குறிக்கப்பெறுவர்.

இது இறக்குவான் வழி வழி எச்சம் அறுவான்: இந்தத் தர்மத்தைக் கெடுப்பவன் வமிசம் அற்றுப் போவான்.

'ஏழுவழி எச்சம் அறுவான்' என்றும் குறிக்கப்படுவது உண்டு.

குடம்கொண்டு கோயில் புகுவான் காப்பதாக: கோவிலுக்கான இந்தத் தர்மத்தை அந்த அந்தக் காலத்தில் பூசை புரிபவர் யாவரேயா யினும் அவர் காத்து ரக்ஷிப்பார்.

'குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுவான்' என்றும் சில சாசனங்களில் காணப்படும். 'இது பன்மாகேச்வர ரக்ஷை' என்று சோழர்களுடைய பழைய சாசனங்களில் காண்பதும் இதனையே குறிக்கும்.

நிலங்களை விற்கும்போதும் தானம் செய்யும்போதும் அவற்றைப் பெறுகிறவன் எந்த எந்த உரிமைகளையும் அடைகிறான் என்பதைக் குறிப்பதாகக் காணும் வாசகங்கள்.

உடும்போடி ஆமைதவழுவது:

புற்றும் தெற்றியும்:

மேல் நோக்கிய மரமும் கீழ் நோக்கிய கிணறும்.

ஜல நிதி, தரு பாஷாண, அக்ஷிணி ஆகாமி, சித்த சாத்யமேன்னப் பட்ட அஷ்ட போகங்களும், தேசஸ்வாமியங்களும் உள்பட:

இவை யாவும் ஒரே பொருளை உணர்த்துவன.

பணம் பெற்றுக்கொண்டு எல்லா உரிமைகளோடும் விற்றுக் கொடுத்ததைத் தெரிவிக்கும் வாசகங்கள்:

விலைக்குறவிற்றுப் பொருளுறக் கைக்கொண்டு விற்று விலை யாவணம் செய்து கொடுத்தோம்.

இதுவே பொருள் மாவறுதிச்சேலவோலையாகவும். இதுவல்லது வேறுபொருள் மாவறுதிச் சேலவோலை காட்டேன்று சொல்லப்பெறுதா கவும்.

பிற்சேர்க்கை IV

சாசன சுலோகங்கள்

தானம் அளிப்பவர்களுக்குக் கிட்டும் புண்ணியம், அந்தத் தானத்தைக் கெடுப்பவர்கள் அடையும் பாபம், தானம் அளித்ததைப் பாதுகாக்க வேண்டிய முறை ஆகிய விஷயங்களைத் தெரிவிக்கும் பின் வரும் ஆறு சுலோகங்களும் சகஜமாகத் தான சாசனங்களில் காணப்படுகின்றன. அவை எல்லாம் சேர்ந்து இராது; ஒன்றோ இரண்டோ மூன்றோ சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடியும் தானம் வழங்குபவர்களின் விருப்பப்படியும் சேர்க்கப்பட்டிருக்கும். இந்தப் புத்தகத்தில் அவை பல இடங்களில் தமிழ் எழுத்திலும் கிரந்த எழுத்திலும் பிழைகளுடன் காணப்படுகின்றன. அவற்றின் சரியான பாடமும் தமிழ் மொழி பெயர்ப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

𑌦𑌾𑌨𑌪𑌾𑌲𑌨𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇
𑌦𑌾𑌨𑌾𑌚𑍍𑌛𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ।
𑌦𑌾𑌨𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍍𑌗𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿
𑌪𑌾𑌲𑌨𑌾𑌦𑌚𑍍𑌯𑍁𑌤𑌂 𑌪𑌦𑌮𑍍 ॥

தானம் செய்வது, அளித்த தானத்தைப் பரிபாலிப்பது, இவ்விரண்டினுள், தானத்தைக் காட்டிலும் பரிபாலனமே சிறந்தது. தானம் செய்வதால் சொர்க்கம் கிட்டுகிறது. பரிபாலனத்தாலோ வைகுந்தமே (அழிவற்ற ஸ்தானம்) கிட்டுகிறது.

𑌸𑍍𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌦𑍍𑌦𑍍𑌵𑌿𑌗𑍁𑌣𑌂 𑌪𑍁𑌣𑍍𑌯𑌂
𑌪𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌨𑌮𑍍 ।
𑌪𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌪𑌹𑌾𑌰𑍇𑌣
𑌸𑍍𑌵𑌦𑌤𑍍𑌤𑌂 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

தான் அளிப்பதைக் காட்டிலும் பிறர் கொடுத்ததைப் பரிபாலனம் செய்வது இரு மடங்கு புண்ணியத்தைக் கொடுக்கும். பிறர் அளித்ததை அபகரித்தாலோ தான் கொடுத்ததும் பலன் அற்றதாக (நிஷ்பலமாக)ப் போய் விடும்.

𑌸𑍍𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌪𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌵𑌾
𑌯𑍋 𑌹𑌰𑍇𑌤 𑌵𑌸𑍁𑌨𑍍𑌧𑌰𑌾𑌮𑍍 ।

ஷஷ்டிவஷ-ஸஹஸ்ராணி
விஷ்டாயாம் ஜாயதெ க்ருமிः ॥

தான் கொடுத்ததாயினும், பிறர் கொடுத்ததாயினும், ஒருதரம் கொடுத்த தானத்தைக் கைப்பற்றுகிறவன் இந்தப் பூமியிலே அறுபதினுயிரம் வருஷம் புழுவாகப் பிறந்து உழல்வான்.

ஏகைவ ஹமிநீ லோகெ
ஸவெஷாமெவ ஹூஜாழ ।
ந ஹோஜ்யா ந கரமுராஹ்யா
விஷ்ணுதத்தா வஸுந்தரா ॥

இவ்வுலகத்து அரசர்கள் எல்லோருக்கும் உடன் பிறந்தவள் ஒருத்தியே யாக விளங்குபவள் பூமிதேவி. அதனுல் விஷ்ணுவுக்காக அளிக்கப்பட்ட இந்தப் பூமி, பிறர் அனுபவிப்பதற்கும் கைப்பற்றுவதற்கும் உரிமையற்றது.

[இந்தச் சுலோகத்தின் நாலாவது அடியில் வரும் சொல்லே விஷ்ணு ஆலயத்துக்கோ சிவன் கோவிலுக்கோ பிராமணர்களுக்கோ தானமாக அளிக்கும்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி விஷ்ணுதத்தா, தேவதத்தா, விப்ரதத்தா, பிரம்மதத்தா என்று மாற்றி அமைத்து விடுவது வழக்கம்.]

ஆதித்யசந்த்ராவநிலொநலஶ்ச
த்யௌர் ஹூமிராபொ ஹ்ருதயம் யமஶ்ச ।
அஹஶ்ச ராத்ரிஶ்ச உஹெ ச ஸந்த்யெ
தர்மஶ்ச ஜாநாதி நரஸ்ய வ்ருத்தம் ॥

சூரியன், சந்திரன், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி, நீர், இதயம் (உள்ளம்), யமன், பகல், இரவு, இவ்விரண்டும் கூடும் இரு சந்தியா காலம், தர்மம் ஆகியவர்கள் மனிதனுடைய வரலாற்றை (நடத்தையை) அறிகிருர்கள்.

யஶ்சைதஸ்ய தஸ்ய யொ விக்நம்
கரொதி ஸ பாபாத்மெஸ்தெ ।
மஹாயாः கபிலாம் ஹத்வா
யொ தொஷ ஸ்தஸ்ய வாப்நுயாத் ॥

இந்தத் தர்மத்தைத் தடை செய்யும் ஒருவன் கங்கைக் கரையிலே கபிலைப் பசுவைக் கொன்ற பாபத்தை அடைவான்.

பின் வரும் மூன்று சுலோகங்கள் பெரும்பாலும் விஜயநகர சாசனங்களின் ஆரம்பத்திலே கடவுள் வணக்கமாகக் காணப்படுபவை.

𑌨𑌮𑌸𑍍𑌤𑍁𑌙𑍍𑌗 𑌶𑌿𑌰𑌶𑍍𑌚𑍁𑌮𑍍𑌬𑌿
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰 𑌚𑌾𑌮𑌰𑌚𑌾𑌰𑌵𑍇 ।
𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌨𑌗𑌰𑌾𑌰𑌮𑍍𑌭
𑌮𑍂𑌲𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌾𑌯 𑌶𑌮𑍍𑌭𑌵𑍇 ॥

சாமரம் போன்ற சந்திரனைத் தலையிலே அழகாகத் தரித்திருப்பவரும் மூவுலகங்களிலும் உள்ள நகரம் கிராமம் முதலியவற்றின் சிருஷ்டிக்கு ஆதாரமான தூணாக (மூலஸ்தம்பமாக) இருப்பவருமான சம்பு என்னும் ஈசுவரனை வணங்குகிறேன்.

𑌹𑌰𑍇𑌰𑍍𑌲𑍀𑌲𑌾𑌵𑌰𑌾𑌹𑌸𑍍𑌯
𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌦𑌣𑍍𑌡𑌸𑍍𑌸 𑌪𑌾𑌤𑍁 𑌵𑌃 ।
𑌹𑍇𑌮𑌾𑌦𑍍𑌰𑌿𑌕𑌲𑌶𑌾 𑌯𑌤𑍍𑌰
𑌧𑌾𑌤𑍍𑌰𑍀 𑌛𑌤𑍍𑌰𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌦𑌧𑍌 ॥

வராக அவதாரம் எடுத்து விளையாட்டாகப் பூமியைத் தூக்கித் தன் தந்தத்தால் தாங்கி நின்றபோது அந்தத் தந்தமே பிடியாகவும், பூமியே பொற்கலசமாகவும் அடைந்து குடை பிடித்தாற்போல் விளங்கிய விஷ்ணு காப்பாற்றட்டும்.

𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌾𑌯𑌾𑌸𑍍𑌤𑍁 𑌤𑌦𑍍𑌧𑌾𑌮
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌪𑌹𑌮𑍍 ।
𑌯𑌦𑍍𑌗𑌜𑍋𑌪𑍍𑌯𑌗𑌜𑍋𑌦𑍍𑌭𑍂𑌤𑌂
𑌹𑌰𑌿𑌣𑌾𑌪𑌿 𑌚 𑌪𑍂𑌜𑍍𑌯𑌤𑍇 ॥

யானை உருவம் பெற்றிருப்பினும் யானையினின்றும் பிறக்காதவரும் [அகஜா என்னும் பார்வதியினிடம் பிறந்தவரும்] யானைக்கு விரோதியான சிங்கமே வணங்கும்படியான வரும் [விஷ்ணுவினாலும் பூசிக்கப்படுபவரும்] ஆன கணபதி எல்லா விக்கினங்களையும் போக்கி நன்மை பயப்பாராக.

[இந்தச் சுலோகம் சிலேடையாக அமைந்துள்ளது.]

ADDITIONS AND CORRECTIONS

குறிப்பும் திருத்தமும்

3. ஸத்தானம் என்பது நீர் வார்க்காமல் கொடுக்கப்படும் தானம் ஆகும். பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் அளிக்கப்படும் தானத்தைக் குறிக்கும்.

71 The verse at the end of this inscription has been copied separately as No. 299 of 1940. It is stated that the characters are of the 13th century A.D. and the record states that Nallūr granted by the king Kulōttuṅgachōḷa to the temple of Kanakachchinagiri Appar is a sacred ground.

கீழ்க்குறிப்பாகக் கொடுத்துள்ள செய்யுளில், இரண்டாவது அடியில் 'கனகச் சினகிரி அப்பர்' என்றும், மூன்றாவது அடியில் 'சோழன் கொடுத்த நல்லூர்' என்றும் வாசிக்க வேண்டும்.

73 This has been copied as No. 310 of 1940, where the regnal year of the king is given as the 16th. It is an uufinished record registering the gift of land under Kundavai-ēri (tank) as *śivigaip-puṟam* (palanquin maintenance).

கீழ்க் குறிப்பு 3. 'சிவிகைப் புறமாக' என்று இருக்க வேண்டும்.

4. 'குந்தவை எரியின் கீழ் உடைப்பின் பாடு திருத்தி விட்ட நிலத்தில்' என்பதனோடு சாசனம் அபூர்த்தியாகவே நின்று விடுகிறது.

74 This has been registered as No. 313 of 1940, wherein, the regnal year of the king is given as 5.

77 Registered as No. 314 of 1940 as dated in the 3rd regnal year of Sakalabhuvana chakravartin Peruñjiṅgadēva. The name of the donor is givin as......śingan, a native of Pālaiyūr.

80 Probably same as No. 311 of 1940 dated in the 4th regnal year of Tribhuvana chakravartin Kulōttuṅgachōḷadēva recording an endowment of 420 *kalam* of paddy by the measure *Āṭkoṇ-ḍān-marakkāl* out of the annual *pāḍikāval* income from the village Ja[na*]nātha-maṅgalam by Āḷappiṟandān Mōgan *alias* Kulōttuṅga śōḷa-Kāḍavarāyan for offerings to (the image of) Kachchi-Nāyanār.

Cf. No. 314 of 1940, in characters of the 13th century A.D. stating that the image of Kachchi-Nāyakar was endowed by Āḷappiṟandān Mōgan Kachchiya[rāyar*] at Tirunaṟuṅgoṇḍai.

82 (அ) Registered in No. 303 of 1940. The characters are said to be of about the 16th century A.D. It is given therein that Guṇabhadrāchārya was also called Vīrasaṅghapratishṭhāchāryan.

82 (ஆ) Registered as No. 305 of 1940. Built in at the right end. The characters belong to about the 13th century A.D.

113 Read the last note as (vide No. 51 in page 62 above.)

125 இதன் தலைப்பில் 'தேசூர்' என்னும் ஊர்ப்பெயர் இருக்கவேண்டும்.

Add the name of the village 'Dēśūr' at the top.

139 இது செந்தமிழ் 5–ஆம் வெளியாகியுள்ளது.

350 This has been published in the *South Indian Inscriptions* (*Texts*), vol. VII as No. 58.

502. Registered as No. 111 of 1933.

503. Registered as No. 115 of 1933. The date of the record has been read as the 1[6]th year, [Mithuna].

504. Registered as No. 114 of 1933.

505 This has been copied by the Epigraphy Department as No. 113 of 1933 and the record is of time of **Rajanarayana Sambuvaraya.**

746 Registered as No. 384 of 1940. [copied from the inner wall of the outermost gōpura in the Ujjīvanātha temple at Uyyakkoṇḍān-Tirumalai].

755 Registered as No. 390 of 1940. [on the south wall of the maṇḍapa in front of the central strine in the Madhyārjuna temple]. Built in at the ends of lines and incomplete. Record dated in Śaka 1***, Kīlaka, Mithuna, ba, daśami, Monday, Aśvati in the reign of the Vijayanagara ruler **Devaraya** [Mahārāya] son of Vira Vijaya rāya. Mentions the re-consecration of two temples, viz., Avanīśvara and Tiruvakkīśvara, while renovating the temple of Marudāntīśvaram-uḍaiya-Nāyanār at Rājēndraśōḻa-pēṭṭai in Śūralūr-kūṟṟam, a sub-division of Rājagambhīra-vaḷa-nāḍu, by the *nagarattār* of the place, who also made provision for worship in them.

பிற்சேர்க்கை - V

மெய்க்கீர்த்தி விவரம்

தமிழ் நாட்டு மன்னர்களுடைய சாசனங்களிலே மெய்க்கீர்த்தி முக்கியமான பகுதி. ஒவ்வோர் அரசனுக்கும் தனித் தனியாக வழங்கிவந்த அம்மெய்க்கீர்த்தியிலே சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மெய்க்கீர்த்திகளும் உண்டு. அத்தகைய மெய்க்கீர்த்திகளிலே பின்வருபவை இந்தத் தொகுப்பில் காணப் படுகின்றன.

சோழ மன்னர்கள்

முதலாம் இராஜராஜசோழன்

திருமகள் போல — பக்கம் 479

முதலாம் இராஜேந்திரசோழன்

திருமன்னி வளர — பக்கம் 594

முதற் குலோத்துங்கசோழன்

புகழ்மாது விளங்க — பக்கம் 481

வீரமே துணை — பக்கம் 47

விக்கிரமசோழன்

பூமாது புணர — பக்கம் 400

இரண்டாம் குலோத்துங்சோழன்

பூமன்னு பதுமம் பூத்த — பக்கம் 1006

இரண்டாம் இராஜராஜன்

புயல் வாய்த்து — பக்கம் 560

பூ மருவிய பொழிலேழும் — பக்கம் 1010

மூன்றும் இராஜராஜன்

சீர்மன்னி இருநான்கு திசை — பக்கம் 941

பண்டிய மன்னர்கள்

ஜடாவர்மன் குலசேகரன்

பூதல மடந்தை — பக்கம் 786

மாறவர்மன் சுந்தரபாண்டியன்

பூ மருவிய திருமடந்தையும் — பக்கம் 789

மாறவர்மன் விக்கிரம பாண்டியதேவர்

திருமகள் ஜயகள் — பக்கம் 793

விக்கிரம பாண்டியதேவன்

'ஸமஸ்த புவனைகவீர'

[சம்ஸ்கிருதப்பிரசஸ்தி] — பக்கம் 93

APPENDIX VI

—: (o) :—

ABSTRACT of inscriptions for which only summaries are given in the fore-going pages, their texts having been published elsewhere.

The following abbreviations are used :

S. I. I. **The South Indian Inscriptions**

[13 volumes have been published so far. Of these, the first three contain the text and translation with detailed introduction and notes. The next five volumes, Nos. IV to VIII, contain only the texts. Nos. IX to XI are in Telugu and Kannaḍa. The other two volumes, No. XII and XIII, contain the texts with introductory notes.]

E. I. **Epigraphia Indica.**

2. On the southern side of the eastern gōpura in the second prākāra of the Vīraṭṭānēśvara temple at Tiruvadigai. Undated and incomplete record of the reign of Sakala bhuvana chakravartin **Avani Alappirandan Kopperunjinga.** Seems to register the gift of 15 *mā* of land in Śiṟuvākūr, a village in Śēndamaṅgalap-paṟṟu, belonging to Vallavarāyan Thoṭṭamān Sōmanāthadēva, to god Tiruvīraṭṭānam-Uḍaiyar of Tiruvadigai. Published in *S.I.I.,* vol. VIII, as No. 334.

21. On the north wall of the first prākāra in the temple of abhānātha at Chidambaram. Record in prose and verse dated in the 44th year, Mēṇa, Friday, Rōhiṇi, corresponding to A.D. 1114, March 13, in the reign of the Chōḷa king Tribhuvana chakravartin **Kulottunga Chola** (I), who is also referred to as **Jayadhara** in the verse, registering the gift of a gold vessel for offering drinking water to god by Rājarājan Kundavvai Āḻvār, the illustrious (younger) sister of the king. It also records the fixing up of the precious stone

offered to Rājēndra Chōḻa by the Kambhōja king, as a mirror to the god. Published in *E.I.*, vol. V, p. 105.

34. On the base of the south wall of the mahāmaṇḍapa in front of the central shrine in the Oppilāmanīśvara temple at Aragaṇḍa-nallūr. Record dated in the 3rd year of the reign of Tribhuvana chakravartin **Kopperunjingadeva** registering the gift of the village Śembiyanmādēvi, in Meykunṟa-nāḍu, on the southern bank of the river Peṇṇai, to meet the expenses of offerings, sacred paste, lights, etc. to god Opporuvarum-illāda-Nāyanār of Tiruvaṟaiyaṇinallūr by Chōḻa-tuṅgap-pallavaraiyan Śrīpāla-dēvan Marutāṇḍāḻvār *alias* Rājarāja Śrīpālan, the chief of Pērāyil in Kaṇṇuḍainallūrp-paṟṟu. The gift village was included in his domain. Published in the *S.I.I.*, vol. XII, as No. 137.

36. On the base of the west wall of the central shrine in the same temple. Record dated in the 14th regnal year of **Kopperun-jinga** stating that the tank-bund which had been in ruins for a long time was rebuilt by Nāgattambaiyan Eḍuttapādam paḍiyān, a merchant of Tirukkōvalūr, at the instance of the *sthānattār*, who granted the merchant 2000 *kuḻi* of land as *kāṇi*. Published in the *S.I.I.*, vol. XII, as No. 226, wherein the regnal year of the king is given as [2]4.

37. On the base of the south wall, near the image of Dakshiṇā-mūrti, of the same shrine. Record dated in the 8th year of the reign of the Pāṇḍya king Māṟavarman *alias* Tribhuvana chakra-vartin **Vikramapandyadeva** registering the tax-free (*iṟaiyili*) gift of the income on half of the village which he had obtained by right, to meet the expenses of daily worship and conduct of the service *Rājākkaṇāyan sandi* which he had instituted in the name of the king in the temple of Opporuvarum-illāda-Nāyanār at Tiruvaṟaiyaṇi-nallūr. Published in *S.I.I.*, vol. VII, as No. 1018.

38. On the base of the south wall (eastern sector) of the same shrine. Record dated in the 32nd year of the reign of the Chōḻa king Tribhuvana chakravartin **Kulottungacholadeva** stating that Tirukkāḻatti-uḍaiyān Āḍuvān *alias* Paṭṭaṇasvāmin, the headman of Āttambūr in Vaḍa (North) Veḷḷāṟṟuk-kūṟṟam, in Paṇḍya-maṇḍalam built of stone the temple of Opporuvarum-illāda-Nāyanār at Tiru-vaṟaiyaṇi-nallūr. Published in *S.I.I.*, vol. VII, as No. 1019.

39. On the base of the north wall of the ardhamaṇḍapa in front of the same shrine. Record dated in the 2nd regnal year of the Pāṇḍyan king Tribhuvana chakravartin **Vikrama Pandyadeva** registering the tax-free gift as *iṟaiyili tirunāmattukkāṇi* of the village

Dēvanūr *alias* Vikrama pāṇḍya-nallūr, in Uḍaikkāṭṭu-nāḍu on the northern bank of the river Peṇṇār, a sub-division of Vāṇakōppāḍi *alias* Rājarāja-vaḷanāḍu, to meet the expenses of offerings, worship, sacred paste, etc. and conducting the *Rājākkaṇāyaṉ* festival instituted in the name of the king in the temple of god Opporuvarum-illāda-Nāyanār. Published in *S.I.I.*, vol. VII. as No. 1023 where the regnal year of the king is given as 8.

41. To the north of the entrance into themukha-maṇḍapa in the second prākāra (opposite to kitchen) of the Vīraṭṭānēśvara temple at Kiḷūr. Record beginning with the *meykkīrtti*, 'Pūmēvu vaḷar' etc. and dated in the 5th year of the reign of the Chōḷa king Rājakēsarivarman *alias* Tribhuvana chakravartin **Kulottunga-choladeva** registering the gift of 1½ *vēli* of land through the assembly (*sabhā*) of the village by Malaiyan Malaiyan *alias* Kulōttuṅga chōḷachchēdiyarāyan, the Malaiyamān chief of Kiḷiyūr to meet the expenses of taking in procession, on every Sunday, the god Tiruppaḷḷiyaṟai-Āḷuḍaiyār in the temple of god Tiru-vīraṭṭānam-uḍaiyār of Tirukkōvalūr in Kuṟukkaik-kūṟṟam, a sub-division of Malāḍu *alias* Jananātha vaḷanāḍu. Published in *S.I.I.*, vol. VII, as No. 913.

47. On the east wall (southern side) of the same shrine in the inner-most prākāra. Record beginning with the *meykkīrtti*, 'Tirumanni vaḷara' etc. and dated in the 6th regnal year of the Chōḷa king Parakēsarivarman **Rajendracholadeva** (I) registering the gift of a gold plate by Rāman Mummuḍiśōḷan *alias* Rājēndraśōḷa-Miḷāḍuḍaiyān, the chief of Milāḍu, and of a gold handled fan by his (younger) brother Rāman Maṟavaḍigal *alias* Muḍikoṇḍaśōḷa Milāḍuḍaiyān to god Tiruvīraṭṭānam-uḍaiya-Mahādēva at Tirukkōvalūr in Kuṟukkaik-kūṟṟam, a sub-division of Milāḍu *alias* Jananātha-vaḷanāḍu. Published in *S.I.I.*, vol. VII, as No. 888.

48. On the east wall of the central shrine in the same temple. Record beginning with the *meykkīrtti*, 'Tirumanni vaḷara' etc. and dated in the 6th year of the Chōḷa king Parakēsarivarman **Rajendra choladeva** (I) registering the gift of 98 sheep for burning a perpetual lamp in front of god Tirukkōvalūr-uḍaiya-Mahādeva by Kulāttulān Kūttan Karumāṇikkam *alias* Kēraḷāntaka Mūvēndavēḷān of Puḷiyambākkam in Uṟukkāṭṭuk-kōṭṭam, a sub-division of Jayaṅkoṇḍaśōḷa maṇḍalam. Published in *S.I.I.*, vol. VII, as No. 860, wherein the regnal year of the king is given as 5.

49. On the north wall of the central shrine in the same temple. Record beginning with the *meykkīrtti*, 'Tirumagaḷ pōla' etc. and

dated in the 17th year of the Chōḷa king Rājakēsarivarman (*i.e.*, **Rajaraja** I) registering the gift of 96 sheep for a perpetual lamp to Tiruvīraṭṭānam-uḍaiyār by Iñjippāṟanaṭṭan Rāman Āṇḍār. Published in *S.I.I.*, vol. VII, as No. 871.

50. On the same wall. Record dated in the 21st year of the reign of the Pallava king Vijaya **Nripatunga Vikrama** registering the gift of 12 *kaḷañju* of gold by Nannan Korran, a servant (*aṟām-uṇṇum*) of Vēṭṭuvadaraiyar, for a perpetual lamp to god Mahādēva of Tiruvīraṭṭānam. Published in *E.I.*, vol. VII, p. 139.

51. On the same wall. Record dated in the 17th year of the reign of the Pallava king Vijaya Vikrama **Nandi Vikrama** registering the gift of 15 *kaḷañju* of gold for a perpetual lamp in front of god Tiruvīrāṭṭānattup-perumān by the concubine of Kōnakkanār Vāṇakōvaraiyar who was the son of Māṇikkattār. Published in *E.I.*, vol. VII, p. 139. Therein the donor is described as Kōnakkanār, the daughter of Māṇikkattār and the concubine of Vāṇakōvaraiyar.

52. On the east wall of the same shrine. Record beginning with the *meykkīrtti*, "Tirumanni vaḷara" dated in the 6th year of the reign of the Chōḷa king Parakēsarivarman *alias* **Rajendrachola-deva** (I) registering the tax-free (*iṟaiyili*) gift of 7½ *mā* of land under the irrigation of the tank Rājavijjādarappērēri to three persons looking after the flower garden, Rājēndraśōḷan *nandavānam*, of the temple of Tiruvīraṭṭānattu-Mahādēva at Tirukkōvalūr, by the assembly (*ūr*) of Marudūr in Kuṟukkaik-kūṟṟam, a sub-division of Malāḍu *alias* Jananātha-vaḷanāḍu. Published in *S.I.I.*, vol. VII, as No. 889.

53. On the north wall of the same shrine. Record beginning with the *meykkīrtti*, "Pugaḷ māḍu viḷaṅga" and dated in the 6th year of the reign of the Chōḷa king Rājakēsarivarman *alias* **Kulottungachola** I registering the remision of all taxes on the village Ariyūr by Kiḷiyūr Malaiyamān Periya-uḍaiyān *alias* Rāja[rāja*]chēdiyarāyan to meet the expenses of daily worship and the Kārttigai festival of the god Tiruvīraṭṭānam-uḍaiya-Nāyanār. Published in *S.I.I.*, vol. VII, as No. 874.

54. On the same wall. Record beginning with the *meykkīrtti*, "Tirumagaḷ pōla" and dated in the 10th year of the reign of the Chōḷa king **Rajakesarivarman (Rajaraja Chola** I) registering the tax-free grant of 10 *mā* of land by the *sabhā* of the *brahmadēya* village of Tirukkōvalūr for offerings to god Kōval-viṭaṅkar of Tiruvīraṭṭānam

Published in *S.I.I.*, vol. VII, as No. 878 where the regnal year of the king is given as 18.

55-56. On the south wall of the central shrine in the temple of Āptsahāyēśvara at Śēndamaṅgalam. Record dated in the 5th year of the reign of Sakalabhuvana chakravartin Śrī **Manavalan Perumal Udaiyar** registering the tax-free (*iraiyili*) gift of land as *tirunāmattukkāṇi* to meet the expenses of the service called 'Eḷiśai-mōgan-sandi', Puraṭṭāśi festival and perpetual lamp in the temple of Vāṇilaikaṇḍavīrēśvaram-uḍaiya-Nāyanār newly erected by him at Śēndamaṅgalam making the place a military station (*paḍaivīdu*). Published in *S.I.I.* vol. VIII, as No. 350 ; also in *E.I.*, vol. XXIV, pp. 22-28.

58. On the tier of the mahāmaṇḍapa to north of entrance into the gōpura of the same temple. Record dated in Saka 1352, Saumya, Tulā, ba. ēkādaśi, Monday, Uttara in the reign of the Vijayanagara ruler Śrī Vīrapratāpa **Devarayar** registering the tax-free (*sarva-mānya*) gift of the two villages Kallaikkurichchi in Kallaikkurich-chipparru and Ārrūr in Śēṇgoṇḍānparru of Vaḷudilampaṭṭu uśāvaḍi, to the temples of Uḍaiyār Āvattukkāttaruḷiya-Nāyanār and Durgā dēvi, the village-goddess at the southern gate of Śēndamaṅgalam in Tirumunaippāḍi nāḍu, a sub-division of Rājarāja-vaḷanāḍū in Naḍu-vil-maṇḍalam, to meet the expenses of worship, offerings, perpetual lamp, and special car festival on the day of the asterism Śatayam in the month of Paṅguni, for the removal of all troubles to the king. Published in *S.I.I.*, vol. VIII, as No. 349.

59. On the southern side of the inner face of the inner gōpura of the temple. Record dated in the 17th year, 186th day in the reign of the Pāṇḍyan king **Sundara Pandyadeva** registering the tax-free gift of the village [Śēndamaṅgalam] as *tirunāmattukkāṇi-iraiyili* to meet the expenses of offerings and the special festival and *sandi* 'Ellāntalaiyāna perumāḷ' instituted by the king in the temple of Vāṇilaikaṇḍavīrēśvaram-uḍaiya-Nāyanār, from the month of Tai of that year. Published in *S.I.I.*, vol. VIII, as No. 359.

60. At the same place. Incomplete and undated record of the reign of the Pāṇḍyan king Tribhuvana chakravartin Kōnērinmai-koṇḍān **Parakrama Pandyadeva** registering the tax-free gift as *tirunāmattukkāṇi* of the village Āttippaṭṭu to the south of Muḍiyūr in Tiruveṇṇainallūr-parru, a sub-division of Tirumunaippāḍi-nāḍu, in Naḍuvil-maṇḍalam by Śrīraṅganātha Nāyaka to meet the expen-

ses of perpetual lamp and the special festival and *sandi* named 'Gaṇdara-gaṇḍa' in the temple of Vāṇilaikaṇḍēśvaram-uḍaiya-Nāyanār. Published in *S.I.I.*, vol. VIII, as No. 355.

61. On the tier to the north of the mahāmaṇḍapa in the same temple. Record dated in the 6th regnal year, Āḍi 5, of the Pāṇḍyan king Tribhuvana chakravartin Kōnerinmaikoṇḍān **Vira Pandyadeva** registering the tax-free gift of the village Tulāmpūṇḍi, to the south of the river Gaḍilam, to meet the expenses of the *sandi* and festival instituted as 'Bhūmiputran' in the name of the king, in the temple of Vāṇilaikaṇḍīśvaram-uḍaiya-Nāyanār at Śēndamaṅgalam in Āḍanūr-paṟṟu, a sub-division of Kuṟukkaik-kūṟṟam in Milāḍu *alias* Jananātha vaḷanāḍu. Published in *S.I.I.*, vol. VIII, as No. 353.

63. On the gōpura of the same temple. Record stating that the village of Koṭṭaiyūr in Maṇḍipurap-paṟṟu in Iṟaiyānaṟaiyūrp-paṟṟu was granted tax-free from the Tai month of the 17th year to meet the expenses of 5 perpetual lamps, festival named 'Ellāntalai yanaperumāḷ' and the *sandi* named 'Ayyan-aṅkakāra' in the temple of god Vāṇilaikaṇḍa vīrīśvaram-uḍaiya-Nāyanār. The name of the king is not found. But Neṭṭūr-uḍaiyan figures as the signatory. This probably belongs to the time of the Pāṇḍyan king Jaṭāvarman **Sundara Pandyadeva.** Published in *S.I.I.*, vol. VIII, as No. 383; where the name of the gift village is given as "Ko[mb]aiyūr."

65. On the base of the north wall in the second prākāra of the Trivikrama-perumāḷ temple at Tirukkōvalūr. Record with the Sanskrit *praśasti* 'Samastabhuvanaikavīra' and dated in the 8th year, Dhanus, ba. ashṭami, Friday, Hasta in the reign of the Pāṇḍyan king **Vikrama Pandyadeva** registering the tax-free gift of 2068 *kuḻi* of land to maintain a perpetual lamp to illuminate the face of the god Tiruviḍaikaḻi Nāyanār at Tirukkōvalūr by Guṇanallulān Araiyan Tiruvalañjuḻi-uḍaiyān Aḻagapperumān *alias* Kāḍupaṭṭi of Koṭṭilampākkan for the merit of the king. Published in *S.I.I.*, vol. VII, as No. 123, where it is stated that the record is found on the north wall of the first prākāra.

67. On the base of the north wall in the second prākāra in the same temple. Undated and incomplete record registering the decision of the assembly known as **Chittirameli-Periyanattavar** to pay *padakku* paddy per plough and one *kuruṇi* paddy per member of their community to god 'Perumāḷ who was pleased to take his stand at Tiruviḍaikaḻi,' otherwise known as Chittiramēḻi-viṇṇagar of the 79 *nāḍu* and the 18 *bhūmi* at Tirukkōvalūr in Milāḍu *alias* Jananātha vaḷanāḍu. Published in *S.I.I.*, vol. VII, as No. 129.

72. On the north wall of the Chandranatha (Jain) temple at Tirunarunkondai. Record dated in the 3rd year of Tribhuvana chakravartin **Konerinmaikondan** registering the tax-free (*iraiyili*) gift as *pallichchandam* of 10 *vēli* of land in S'iruśattanallūr for the worship of the Tirunarunkondai-*palli* and the goddesses [bhatarikas] referred to in the inscription as *Amanpidārikal*. Published in *S.I.I.*, vol. VII, as No. 1012.

86. On the base of the south wall of the ardha mandapa in front of the central shrine in the temple of Vriddhagirīs'vara at Vriddhāchalam. Record dated in the 22nd year, Mēsha, ba. daśami, Monday, Avittam in the reign of the Chōla king Tribhuvana chakravartin **Kulottungacholadeva** registering the gift of 100 cows by Kūdal Elis'aimōgan Manavālapperumāl *alias* Vānilaikandaperumāl *alias* Rājarāja-Kadavarāyan for bathing the god Tirumudukunram-udaiyār with milk. Published in *S.I.I.*, vol. VII, as No. 146. There the regnal year of the king is given as 28.

87. At the same place. Record dated in the 5th year of Sakalabhuvana chakravartin **Kopperunjingadeva** registering the gift of a golden mango-sprout (jewel) to the god Tirumudukunram-udaiya-Nāyanār by Tēvum-tiruvum-udaiyāl *alias* S'embon Tyāgi Mānikkam, daughter of Pākkār Ālvi *alias* Pan-Māhēs'vara Nangai, a *devaradiyāl* in the temple. Published in *S.I.I.*, vol. VII, as No. 147.

88. At the same place. Another record dated in the 15th year of **Kopperunjinga** registering the gift of 90 sheep for a perpetual lamp in the temple by Tiruvagattīśvaram-udaiyan Udaiyān Mudikondavēlan of *dēvadānam* Ālachchukkudi. Published in *S.I.I.*, vol. VII, as No. 148 where the regnal year of the king is given as 8.

89. At the same place. Record dated in the 14th year of the reign of the Chōla king Tribhuvana chakravartin **Rajarajadeva** registering the gift of 90 sheep for a perpetual lamp in the temple of Tirumudukunram-udaiya-Nāyanār by Edirikanāyan Pottappich-chōlan, one of the *agambadi-mudali* of the Pallava Kopperuñjinga. Published in *S.I.I.*, vol. VII, as No. 149.

92. On the northern side of the gōpura of the second prākāra in the same temple. Record dated in the 10th year of the reign of Sakalabhuvana chakravartin **Kopperunjinga** registering the gift of 200 cows to god Tirumudukunram-udaiya Nāyanār by Avani-Ālap-pirandān *alias* Kōpperuñjinga of Kūdal in Kilāmur-nādu, a sub-

division of Tirumunaippāḍi for bathing the god with milk, and ghee and also made a gift of a gold forehead-plate (*paṭṭam*) set with stones, in expiation of the sin of having killed the Hoysaḷa *daṇḍa-nāyakas*, Kēs'avan, Hariharan and others and captured their ladies and treasures at Perambalūr. Published in *S.I.I.*, vol. XII, as No. 124.

95. On the north wall of the kitchen to the south of the *sannidhi* in the same temple. Record dated in the 16th year of **Kopperunjinga** registering the gift of 90 sheep by Aruḷāḷan Tyāgavinōdan, son of S'ōlaikkōn and the chief of Jananātha chaturvēdimaṅgalam *alias* Viḻuppuram for burning a perpetual lamp in front of god Tirumudukunṟam-uḍaiya-Nāyanār. The liquid measure *Devāśiriyan nāḻi* is mentioned. Published in *S.I.I.*, vol. VII, as No. 192.

107. On the wall of the Sabhāpati shrine in the north prākāra of the Aruṇāchalēśvara temple at Tiruvaṇṇāmalai. Record dated in the 1st (which is a mistake for the 9th) year in the reign of Sakalabhuvana chakravartin **Kopperunjinga** assigning all the minor taxes (*āyam*) collected in all the *dēvadāna* villages, as in the 8th year, to the temple of god Tiruvaṇṇāmalai-uḍaiya-Nāyanār from the Puraṭṭāśi month of the 9th year as ordered by Aiyya-dēvar.

111. On the southern side of the Vallāḷarāyar gōpura (second prākāra). Record dated in the 22nd year, Kārttigai 13, in the reign of the [Pāṇḍyan] king Tribhuvana chakravartin **Sri Vallabhadeva** intimating the concession of non-collection of the principal from the *dēvaraḍiyārs* of the place. Published in *S.I.I.*, vol. VII, as No. 162.

232. On the south wall of the central shrine in the Muruganātha temple at Tirumuruganpūṇḍi. Record of **Konerinmaikondan,** the date of which is lost, registering the grant of 48 *kalam* of paddy, measured by *Rājakēsari*, in the village Pallōḍam *alias* Adirādirāja-nallūr in Vāyaṟaikkāl-nāḍu to Āṇḍār-Palaviḷakkappichchar, of the flower garden *Vīraśōḻan-tirunandavanam* of the god Tirumurugan-pūṇḍi-Nāyanār. Published in *S.I.I.*, vol. V, as No. 248.

241. On the south wall of the mahāmaṇḍapa in the temple of Toṇḍisvara otherwise known as Ārdrakapālīs'vara at Erode [Īrōḍu]. Record dated in the 4th year of the reign of the Koṅgu king Rājakēsarivarman *alias* Tribhuvana chakravartin **Ravi Kodai** *alias* [Kō] **Kalimurkha** registering the assignment of some land by Śokkan Vikkiramas'ōḻiyaraiyan, one of the *Veḷḷāḷan-piḷḷar* of Āvaṇipperūr in Pūvāṇiya-nāḍu to his son Akkan Sōman Māmaṇiyāḻvār on the

occasion of the naming ceremony, with the stipulation that he was to pay one-fourth of the revenues (*iṟai-bhōgam*) to god Āḷuḍaiyār Toṇḍīśvaram-uḍaiyār at Īrōḍu. Published in *S. I. I.*, vol., IV as No. 413.

242. On the west wall of the central shrine in the same temple. Record dated in Śaka 1262, Vikrama, Āvaṇi 16, ba. pañchamī, Sunday, Aśvati in the reign of the Hoysaḷa king Bhujabala Vira **Vallaladeva** registering the gift of the village Taṇḍal to god Toṇḍargaḷ Nāyanār at Īrōdu in Kāñchittuṇḍam by the assembly (*nāṭṭavar*) of Pūnduṟai when they met at Veḷḷōḍu. Published in *S.I.I.*, vol. IV as No. 415.

